பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி


# VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 23 செவ்வாய்க்கிழமை (06.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 138

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில்



# பாலா – ஹெல்கிசன் முக்கிய சந்திப்பு



## யப்பான் மாநாட்டில் பங்குபற்ற வைக்க முயற்சி

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தையில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளமை பாரதூரமானது. எனினும் பேச்சுவார்த்தையைக் கைவிட்டுமாற்று வழிகளைத் தேடும் அளவுக்கு அதன் தாக்கம் இல்லை என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை விமான நிலையத்தில் சந்தித்து உரையாடிய பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யப்பான் தலைநகர் டோக்கியோவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு திட்டமிட்டபடி நடக்குமா? என்பதை இப்போது கூற முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தை தேக்கநிலை அடைவதற்குரிய காரணங்களைச் சீர்செய்து சமாதானப் பேச்சு வார்த்தைக்கு மீண்டும் புத்துயிரூட்ட வேண்டும். அது விடயத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம். முன்னேற்றங்களும் காணப்படுகிறது என்றும் கூறிய அவர்,

அன்ரன் பாலசிங்கத்துடனான சந்திப்பு ஆக்கபூர்வமானதாகவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முதற்படியாகவும் அமைந்துள்ளது. அடுத்து வரும் தினங்களில் பாலசிங்கத்தை மீண்டும் சந்தித்துப் பேச உள்ளேன். அடுத்த மாதம் யப்பானில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாட்டில் குறிப்பாக வடக்குக் கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படும் போது புலிகளின் பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். (த)

# நேற்று வன்னி திரும்பிய பாலசிங்கம் பிரபாவுடன் மந்திராலோசனை

(கிளிநொச்சி)


தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும நேற்று முற்பகல் 10.10 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

நேற்று அதிகாலை லண்டனிலிருந்து கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள், அங்கிருந்து அரசாங்கத்தின் வான்படைக்குச் சொந்தமான விஷேட ஹெலிகொப்ரரில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

தாயகம் திரும்பிய ஆலோசகர் பாலசிங்கம் தம்பதியினரை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வடமுனைத் தளபதி கேணல் தீபன், மூத்த தளபதி கேணல் பானு, மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா மற்றும் தளபதிகள், போராளிகள்,

(10ம் பக்கம் பார்க்க)





நேற்று வன்னிக்கு வருகை தந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை வரவேற்க தளபதிகள் செல்வதை முதற்படத்திலும், தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்

## அகாஷி -எரிக்சோல் வன்னியில் பிரபா-பாலாவை சந்திப்பர்

(கொழும்பு)

தமிழீழ வடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அமைப்பின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை சந்திப்பதற்காக ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நாளையும், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நாளை மறுதினமும் வன்னிக்குச் செல்லவுள்ளனர்.

வன்னி செல்லும் இவர்கள் தேக்கமடைந்திருக்கும் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அடுத்தமாதம் யப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் விடுதலைப் புலிகள் பங்குபற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் பேச்சு நடத்தவுள்ளனர். (இ)

## திருப்பதி ஆலய கிளை கொழும்பில் அமையும்

(கொழும்பு)

திருப்பதி ஆலயத்தின் கிளை நிறுவனம் ஒன்றை கொழும்பில் ஆரம்பிப்பதற்கு இலங்கை வந்துள்ள இந்தியாவின் ஆந்திர மாநில அறநிலைத்துறை அமைச்சா ஸ்ரீவாண்டு சிவராம ராயு இணங்கியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது இந்து மாநாட்டில்

(10ம் பக்கம் பார்க்க)

## எரிக் சோல்ஹெய்ம் இன்று யாழ்.வருவார்!

(கொழும்பு)

நோர்வேயின் விஷேட சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இன்று யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

யாழ் வரும் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம், வடபகுதியிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களைப் பார்வையிட உள்ளதுடன், யாழ் கோட்டையில் அமைக்கப்படும் இராணுவத் தளத்தினையும் பார்வையிடவுள்ளார்.

யாழ்.அரச செயலகத்தில் முக்கிய மாநாடொன்றையும் நடத்தவுள்ள இவர், யாழ்.படை உயர் அதிகாரிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

## சதீஸ் நம்பியார் இலங்கைவருவார்

(கொழும்பு)

இந்திய முன்னாள் இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார் இவ்வாரம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவு தொடர்பாக இரு தரப்பினருக்கும் தமது ஆலோசனைகளை வழங்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய சதீஸ் நம்பியாரை இலங்கை அரசு அழைத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஈ.பி.டி.பியினருக்கான பாதுகாப்பை அதிகரிக்குக

### படைத்தளபதிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி அமைப்பினருக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா படைத்தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 3ம் திகதி கரவெட்டிப் பிரதேசசபை முன்னாள் தலைவரும் ஈ.பி.டி.பி உறுப்பினருமான ஜெயராசா இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே ஈ.பி.டி.பி அமைப்பினருக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா, இராணுவத் தளபதி லயனல்

(10ம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கோட்டையில் அமையும் முகாம் மக்களுக்கு கேட்டை ஏற்படுத்தாது

## ஒலே புருண்டம் மக்களிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைப் பகுதியில் அமைய



வுளளது பாரிய படைமுகாம் அல்ல. இங்கு சுமார் 500 வரையான படையினரே நிலைகொள்ள வுள்ளனர்.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத தலைவர் ஒலே புருண்டம்.

நேற்றையதினம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெற்ற முகாம் அமைப்பு எதிர்ப்புப் போராட்ட இடத்திற்கு வருகை தந்த இவர் மேலும் குறிப்பிடுகையில்,

மேற்படி முகாம் அமைவதாக மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு இடையூறு எதுவும் ஏற்படாது, வீதித் தடைகள் போடப்படமாட்டாது இதற்கு என்னால உத்தரவாதம் தரப்படும் என்றார்.

அச்சமயம், ஏற்கனவே இப்பகுதியில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் போதாதா? இனியும் அதுபோல நடக்க வேண்டுமா? என பொதுமகன் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த ஒலே புருண்டம்,

முன்னைய கால அசம்பாவிதங்களை மறந்து தற்சமய சமாதான நிலைககு வாருங்கள். எந்தவொரு காரியத்தையும் எதிர்மறையாகச் சிந்திக்காமல் நிகழப்போகும் விடயங்களை சாதகமாக சிந்தியுங்கள்.

இச்சமாதானப் பேச்சுவார்த்தை நிச்சயம் வெற்றி பெற்று நிரந்தர சமாதானம் ஏற்படும் என நம்புவோம். இம்முகாமால் மக்களுக்கு எந்தவித அசௌகரியமும் ஏற்படாது என்றார்.

அரசுடன் மேற்படி விடயம் பற்றி கலந்தாலோசிக்கும் போது தமிழ் மக்களின் அபிலாசைகளை எடுத்துரைக்கும் வண்ணம் பொது மக்கள் தரப்பில் ஒலே புருண்டத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தான் நிச்சயமாக மக்களின் எண்ணக்கிடக்கைகளை வெளிப்படுத்துவேன் என உறுதி அளித்தார்.

முகாம் அமைக்கும் பணி தொடருமாயின் எதிர்ப்புப் போராட்டங்களும் தொடர்ந்து இடம்பெறுமென பொதுமக்கள் இவரிடம் தெரிவித்தனர். (உ- 77- 55)

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் ஜனாதிபதியுடன் கலந்துபேச முயற்சி

(கொழும்பு)

களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 21 தமிழ் கைதிகளையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யும்படி நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை கோரியுள்ளார்.

இது தொடர்பாக கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கும் அவர், கைதிகளின் விடுதலை குறித்து கலநதாலோசிக்க நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்திக்க முயன்று வருவதாகவும் அக்கடிதத்தில் மனோகணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், தம்மை விடுவிக்குமாறும் சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யக் கோரியும், மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதற்கு தமிழ்க்கைதிகள் முயன்று வருகின்றமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

# மகிந்தராஜபக்ஷ – அகாஷி நேற்று சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த




ராஜபக்ஷாவுக்கும், யப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷிக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது, இலங்கை அரசுக்கும, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும் என யப்பானியத் தூதுவர் எதிர்க்கட்சித்தலைவரிடம் எடுத்து விளக்கியுள்ளார்.

அத்துடன், இருதரப்புக்கும் இடையே உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு, அதனைத் தர்த்து சமாதானப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவுவதே தமது எண்ணமாகும் என்றார்.

இச்சந்திப்பின் போது டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் ஆராயபபட்டதாக எதிர்க்கட்சித் தலைவர்



மகிந்த ராஜபக்ஷா தெரிவித்துள்ளார். (தி)

# வெசாக் பண்டிகையை ஒட்டி விரிவான பல ஏற்பாடுகள்

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சிறினவத்ரா எதிர்வரும் வெசாக் பண்டிகைக் காலத்தில் இலங்கைக்கு வரலாற்று முக்கியத்துவம் மிக்க விஜயம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளார்.

தாய்லாந்துப் பிரதமரின் இவ் விஜயத்தை ஒட்டி கண்டியில் ஒரு வார கால வொசக் பண்டிகையை சுற்றுலாத்துறை அமைச்சு தனியார் துறையினரின் பங்களிப்புடன் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அவருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கண்டியில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, வெசாக் பண்டிகையை முன்னிட்டு வெசாக் தீபங்களை ஏற்றுமாறு எல்லா நாடுகளிலும் உள்ள தூதரங்களை புத்தசாசன அமைச்சு கேட்டுள்ளது. இதன் மூலம் சர்வதேசத்திற்கு வெசாக் பண்டிகையின் மகிமையை விளக்க முடியுமென்றும புத்தசாசன அமைச்சு தெரிவிக்கிறது.

இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் விமானங்களில் வொசக் சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் காண்பிக்கும் வீடியோப் படக்காட்சியும் இடம்பெற வுள்ளது.

வெசாக்கை ஒட்டி போட்டி நிகழ்ச்சிகளும் ஒழுங்குசெய்யப் பட்டுள்ளன. முதலாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாவும், 2ஆயிரத்து 500 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இதனைச சுற்றுலாத்துறை அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. (உ)

# பொங்கல் விழா

(சுதுமலை)

இரண்டாவது உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கம ஏற்பாடு செய்துள்ள மாபெரும் பொங்கல் விழா இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 4 மணிக்கு ஏழாலை மத்தி அம்மன் கோவிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வல் பொதுஸ்தாபனங்கள், பாடசாலைகள். [illegible]முகநிலையங்கள் ஆகியன [illegible]கற்கவுள்ளன. (உ-252)

பலாலி வீதியில்
திருநெல்வேலி சந்தியில் C/6100
குகன் எரிபொருள் விற்பனவு நிலையம்
காலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை கட்டுப்பாட்டு விலையில் டீசல், பெற்றோல் மண்ணெண்ணெய், ஒயில் வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

# பேச்சுக்களின் இடைநிறுத்தத்தால் அரசு மனம் சோரக் கூடாது

## கொட்டுக் கொட தர்மவாஸதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

எமது எதிர்பார்ப்புகள் எவ்வளவு உயர்ந்தவையாக இருப்பினும் யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமடைவதற்கு காலம் தேவை. இதுவரை காலமும் யுத்தத்திலீடுபட்டிருந்த, இரு தரப்பினரும் தமக்குள் நம்பிக்கையை கட்டியெழுப்பகால அவகாசம் வழங்கப் படல் வேண்டும். நாம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். உலகம் பூராவிலும் இதனை நாம் காண்கின்றோம். இந்த இடைநிறுத்தத்தைக கண்டு நாம் மனம் சோர்வு அடைந்து விடலாகாது. ஆனால் தொடர்ந்து முன்னேறவேண்டும்.

இவ்வாறு அமரபுர நிக்காயாவின் செயலாளரும் ஸ்ரீ தர்மபால ராமயவின் பிரதம குருவுமான கொட்டுக்கொட தர்மவாஸ தேரர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளது பற்றி தனது கருத்தை தெரிவித்தபோதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, தமிழீழவிடுதலைப புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு, அரசாங்கம் அவர்களைத் தூண்ட வேண்டும்.

ஆயுதப் படைகள் வடக்குகிழக்கு பகுதிகளில் இருந்து விலகக்கூடாதென்றும் அவர்கள் எவ்வித தலையீடுகளின்றியும் கடமைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கர் தெரிவித்துள்ளார். (தி)

## உயர்பாதுகாப்பு வலயம் குறித்த

# முறைப்பாடுகள் தொடர்பில் பலாலியில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விசாரணைகளுக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலர் ருவான் சந்திரசேகர பலாலி இராணுவ தளத்திற்கு செல்லவுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயம்தொடர்பாக பொதுமக்களால் கொடுக்கப்பட்டுள்ள 400கக்கும் அதிகமான முறைப்பாடுகள குறித்தே இவர் விசாரணை நடத்துவார்.

கடந்த மாதம் யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு கடிதமொன்றை எழுதியிருந்தார்.

அதில் அதியுயர் பாதுகாப்பு வலயம் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அமுல்படுத்தப்படவில்லை என்றும் பொது சனப் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

அது சம்பந்தமாகவும் ருவான் சந்திரசேகர பலாலியில் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார். (ந.3)

# நீடித்த கல்வி அபிவிருத்தி திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளினதும் தரத்தை உயர்த்தும் வகையில் கல்வி அபிவிருத்தி அமைச்சு நீடித்த கல்வி அபிவிருத்தி திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் சகல பாடசாலைகளையும் நல்லதொரு நிலைக்கு கொண்டுவரமுடியும் என நம்பப் படுகிறது.

மேறபடி திட்டத்தின் பிரகாரம், வலய மட்டத்தில் அதிபர், உபஅதிபர்களைத் தெரிந்து அவர்களுக்கு முகாமைத்துவம், தலைமைத்துவம் மற்றும் மாணவருடனும், மாணவர்களினது பெற்றோர்களுடனும் இணக்கம் ஏற்படுத்தல், பாடசாலை நடவடிக்கைகளைத் திடடமிடல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் ஏற்கனவே கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் பாடசாலை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-10)

## சட்டவிரோதிகளுக்கு

# ஒரு மாதகால பொது மன்னிப்பு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராட்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு அந்நாட்டரசு ஒரு மாதகால பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது.

ஐக்கிய அரபு இராட்சியத்தில் இலங்கையர்கள் உட்பட 2 ஆயிரத்து 900க்கும் அதிகமானோர் சட்ட விரோதமாகத் தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமன்னிப்புக் காலத்தின் பின்னர் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய அரபு இராட்சியம் அறிவித்துள்ளது. (தி)

# பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்ய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சகல பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்த பாடசாலைக்கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கில ஆசிரிர்களுக்கு விசேட பயிற்சிகள வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய நாட்டில் உள்ள 21 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலக் கல்வி சம்பந்தமான பயிற்சிகளை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, ஆங்கில ஆசிரியர்களின் கல்வி நடவடிக்கைகள் தரப்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# புதிய தலைவர் தெரிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்தி விநாயகராலய பரிபாலன சபைத் தலைவராக எஸ். நடராஜா தெரிவாகியுள்ளார்.

செயலாளராக வி. ஜெயராஜாவும், பொருளாளராக எம். தவனேஸ்வரனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (உ-52)

# மக்கள் புழங்கும் பகுதிகளில் இராணுவ முகாம் வேண்டாம்

## விநாயகமூர்த்தி எம்.பி. பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் புழங்கும் பகுதிகள் எதிலும் இராணுவம் முகாம் அமைப்பதை நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம் எனத் தெரிவித்து யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் ஏ.விநாயகமூர்த்தி பிரதமமந்திரிக்கு கடிதம் எழுதியிருக்கின்றார்.

இராணுவத்தினர் மாநகரசபை காணியை விடுத்து யாழ். கோட்டைப் பகுதியில் மீள முகாம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதை சுட்டிக்காட்டி விநாயகமூர்த்தி பிரதம மந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்படி ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இன்னும் 25 ஆண்டுகளுக்கு இராணுவம் இருக்கப் போகின்றது என்ற கருத்தை வலியுறுத்துவது போல் இராணுவத்தின் நடவடிக்கை தோன்றுகின்றன. ஆனால் அமைதி முயற்சியில் அக்கறை உள்ள எங்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி 90 நாட்களுக்குள் இராணுவம் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள விநாயகமூர்த்தி,

படையினர் ஒன்றில் பலாலிக்குப் போய்விட வேண்டும் அல்லது மாநகரசபை எல்லைக்கு வெளியில் மக்கள் புழங்காத இடம் ஒன்றிற்கு இடம் மாற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (பி)

# யாழ். கல்விப் பணிமனையில் வர்ண நேர அட்டவணைகள்

## கண்ணிவெடிகள் விழிப்புணர்வு பற்றியவையாம்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய வகையில் வர்ணங்களை கொண்ட நேர அட்டவணைகள் யாழ் வலய கல்விப் பணிமனையை வந்தடைந்துள்ளன.

இவை 2ஆம் தவணை ஆரம்பத்தில் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுனிசெப் நிறுவனமும், தேசிய கல்வி . நிறுவகமும் இணைந்து சிறுவர் மத்தியில் வெடிப்பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற அரிய நோக்கத்துடன் இந்த நேர அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-4)

இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பாக...

## உரத்த சிந்தனை

# அர்ச்சனை

ஆலயம் செல்லும் போது வெறுங்கையோடு போகக் கூடாது. கையுறையாகப் பூவோ, பழமோ, பாலோ கொண்டு போக வேண்டும். வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கற்பூரம் இவற்றையும் அர்ச்சனைப் பொருளாகக் கொண்டு போகின்றோம். இறைவனுக்கு அர்ப்பணம் செய்து அவனை அர்ச்சிப்பதற்க்காகக் கொண்டு போகின்ற இப் பொருட்கள் புனிதமானவை. அதற்குரிய பவித்திரம் பேணப்பட வேண்டும்.

தூய்மையாகத் துலக்கிய தட்டிலே இவற்றை அழகாக அடுக்கி வைத்து இரு கரங்களாலும் தாங்கி இடுப்புக்கு மேலே உயர்த்தி மார்போடு சேர்த்துக் கொண்டு போகின்றோம். எங்கள் இதயம் அந்த அர்ச்சனைத் தட்டில் இருக்கின்றது.

வெள்ளையுள்ளமும் விரும்பும் இனிமையும் எங்கள் உள்ளத்தில் இருக்கின்றன. வெளியே அவற்றைத் தெரிய விடாமல் ஆணவமாகிய அறியாமை இருள் மறைத்திருக்கின்றது. இறைவன் சந்நிதியில் புற இருள் நீங்கி அகவொளி பளிச்சிடும். வலிய துன்பம் விலகினால் மென்மையான இன்பம் தலைகாட்டும். அதனைக் காட்டத்தான் தேங்காய் அர்ச்சனைத் தட்டில் இடம்பெறுகின்றது.

கனிந்த பழங்களைக் காணிக்கையாக்குகின்றோம். எமது கருணை நிறைந்த கனிந்த உள்ளத்தை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதற்காக.

மலர்ந்து மணம் வீசும் மலர்கள் அவன் பாதங்களைச் சென்றடைவதற்காகத் தட்டிலே காத்திருக்கின்றன. எமது உள்ளங்களும் மலர்ந்து மணம் வீச வேண்டும். எமது வாழ்க்கையும் தான்.

வெற்றிலை, பாக்கு இலட்சுமீகரம். செல்வப் பேறு.

இத்தகைய தத்துவ் உட்பொருளும் புனிதச் சிறப்பும் மிக்க அர்ச்சனைப் பொருள் விரிந்த தட்டில் விளங்கித் தெரிவதற்குப் பதிலாக இன்று ''சொப்பிங் பை'' என்ற நவீன சாதனத்தில் ஒன்றாகக் குவிந்து குமைந்து குழம்பிக் கிடக்கின்றது. ஆலயம் செல்வோர் தமது வசதி கருதி அந்தப் பையில் அனைத்தையும் வைத்து ஒற்றைக் கையிலே தொங்கவிட்டு முழங்காலுக்கும் கீழே ஆடிக்கொண்டிருக்கும் வகையில் கொண்டுபோகும் போது அர்ச்சனை என்பதன் அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது.

ஆலயம் சென்று வழிபடும் போதும் வழிபாட்டு முறைகள் எதுவும் தெரியாமல் மனம் போனபடி வழிபாடு செய்கின்றார்கள் பலர். ஆலயங்களில் அமைந்திருக்கும் வாசற்படிகள் தெய்வீகமானவை. புனிதம் மிக்கவை. அவற்றில் கற்பூரம் ஏற்றி வழிபடுவோர் பலர். இது ஆலயத்தின் தூய்மை, அழகு என்பவற்றையும் கெடுத்து விடுகின்றன. அதற்கென்று அமைக்கப்பட்ட இடங்களில் கற்பூரம் ஏற்றி வழிபடலாமே.

வீழ்ந்து வணங்குதல் என்பது மிக முக்கியமான வழிபாட்டு முறை. வடக்கு அல்லது கிழக்குத் திசையில் மட்டும் தலைவைத்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டுமென்பது விதி. இவ்வாறு வணங்கும் போதும் காற்புறத்திலே ஏதாவது சுவாமி சந்நிதிகள் இடம்பெறுமானால் வீழ்ந்து வணங்குவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று கூறப்படுகின்றது. இவற்றை உணராமல் விரும்பிய திசையில் விரும்பியவாறு வீழ்ந்து வணங்கும் பலரை இன்று ஆலயங்களில் காணமுடிகிறது.

நமது சமய மரபுகளையும் அவற்றின் தத்துவார்த்த உட்பொருள்களையும் ஆராய்ந்து அறிந்து சிந்தித்துத் தெளிவடைந்து நடைமுறையில் பயன்கொண்டு உய்திபெறுவோம்.

தலையே நீ வணங்காய்- தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

ப.சிவானந்த சர்மா B.A (Hons) (கோப்பாய் சிவம்)
நிர்வாக உத்தியோகத்தர-வேத சிவாகம குருகுல கலாசாலை

# வணக்க வழிபாடு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க திருச்சபையின் சகல ஆலயங்களிலும் தேவதாயாரின் வைகாசி வணக்க மாத வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இம்மாதம் 31ஆம் திகதி இவ் வழிபாடுகள் நிறைவு பெறவுள்ளன. (உ)

# குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை அருள்மிகு கணபதீஸ்வரம் சிவன் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வும், நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு குடமுழுக்கு விழாவும் நடைபெறவுள்ளது. (உ)

# அகாஷி அனுராதபுரம் விஜயம்

(கொழும்பு)

யப்பானின் இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி நேற்று முன்தினம் அனுராதபுரம் சென்று அங்குள்ள ஸ்ரீ மகாபோதியில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் அனுராதபுரத்தின் பல பகுதிகளையும் பார்வையிட்டுள்ளார். (தி)

# விசேடபூசை ஆராதனைகள்

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு அந்திக்குழி ஞான வைரவர் ஆலயத்தில் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து வரும் 6ஆம் திகதி வரை விசேட பூசையும் ஆராதனைகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, சாவல்கட்டு ஸ்ரீ அந்திக்குழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களினது பேச்சு, கவிதை, வில்லுப்பாட்டு, பண்ணிசைப் போட்டி என்பனவும் இடம் பெற்றுவருகின்றன. (க-201)

# ஆலய வேலைகள் பூர்த்தி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகத்துக்குள் ''லூர்து கெவி'' ஆலய வேலை பூர்த்தியாகியுள்ளன.

நீண்ட ஒரு குகை போன்றும் அதற்குள் கோவில் இருப்பது போன்றும் மிகவும் தத்ரூபமாக கட்டிட வேலைப் பணிகள் அமையப்பெற்றுள்ளன.

பல லட்சம் ரூபா செலவில் இவ் ஆலயம் அமைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-51)

# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் பொலிஸாருக்கும், பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மாளிகாவத்தைப் பகுதியில் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸாருக்கும், பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (தி)

# வீதிகள் சீரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார் வீதி ஆகியவற்றில் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக வீதி ஓரங்களில் ஏற்படுத்தப்பட்ட குழிகள் மற்றும் வாய்க்கால்கள் என்பன யாழ். மாநகர சபை ஊழியர்களால் சீர்செய்யப்பட்டுள்ளன. (க-4)

## முகாம் அமைப்பிற்கு மக்கள் திரண்டு எதிர்ப்பு



பதாதையுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள்




படைத்தளபதி ஒருவருக்கு நிலைமையை விளக்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்.




நிகழ்வில் கலந்துகொண்ட மாவை எம்.பி



ஆர்ப்பாட்டக் காரர்களின் வரவு கண்டு இராணுவ இயந்திரம் பின்நகர்த்தப்படுகின்றது.



கண்காணிப்புக் குழு அதிகாரிக்கு நிலைமை விளக்கம்



வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது.

படங்கள் : க.பவன்

# இந்தியாவில் அமைச்சர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அரசியல் சட்டத்தில் திருத்தம்

## கட்சி மாறும் எம்.பிக்களைத் தண்டிக்கவும் ஏற்பாடு

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையிலும் மாநில அமைச்சரவைகளிலும் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் எண்ணிக்கையை வரையறை செய்வதற்கும் பாராளுமன்றத்தில் அல்லது மாநில சட்டமன்றங்களில் கட்சி மாறும் உறுப்பினர்களைத் தடுப்பதற்குமான அரசியல் சட்டத்திருத்த முன்வரைவொன்று இந்திய பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெரும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சட்டமூலமாகக் கருதப்படும் இந்த மசோதா கட்சி மாறும் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்களைத் தண்டிப்பதற்கான சரத்துக்களையும் கொண்டிருக்கும் என்று தெரிய வருகின்றது.

இந்த திருத்தச்சட்ட முன்வரைவின் படி லோக்சபையின் அல்லது மாநில சட்டமன்றங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 10 வீத அளவிலேயே அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்றும் சிறிய சட்ட மன்றங்களான சீக்கிம், கோவா, மிசோராம் போன்றவைக்கு 7 வீதமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுப்பதற்கான சட்ட மூலம் ஒன்று ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பதும் அது அரசியல் சட்டத்தின் மூன்றாவது சரத்துக்கு ஏற்புடையதாய் இல்லாமையால் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றது.

இந்தப் புதிய சட்ட முன்வரைவு அரசியல் சட்டத்தில் முரண்பாடான அம்சங்களைத் திருத்தி அமைப்பதாக இருக்கும் என்றும் இந்தத் திருத்தச் சட்ட மூலம் நிரந்தரக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு அங்கு பரிசீலிக்கப்பட விருப்பதால் பாராளுமன்றத் தின் தற்போதைய கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படுவது சாத்தியமில்லை யென்றும் அடுத்த கூட்டத் தொடரிலேயே இது விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

இதேசமயம் பெண்களுக்கு 30 வீத இட ஒதுக்கீடு தொடர்பான சட்டமூலமும் பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (பி-2)

## தீவிரவாத தாக்குதல்களை நிறுத்த முயல்வாராம்

### பலஸ்தீன பிரதமர்

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய இலக்குகளைத் தாக்கி வரும் பயங்கரவாத அமைப்புக்களை ஆயுதக்களைவு செய்விக்க தாம் முயற்சி செய்யப் போவதாக புதிதாக பலஸ்தீன பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மஹமூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

தம்மீதும் அமைச்சரவை மீதுமான நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதத்தில் பலஸ்தீன பாராளுமன்றத்தில் பேசிய அப்பாஸ்,

அரசாங்கத்திடம் மட்டுமே ஆயுதம் இருக்க வேண்டும் வேறு யாரிடமுமல்ல என்று அப்பாஸ் கூறினார். 83 பேர் கொண்ட பாராளுமன்றம் 51-18 என்ற முறையில் நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்தன.

பலஸ்தீன பிரதேசங்களில் பயங்கரவாதத்தை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம். எந்தக்கட்சியாய் இருந்தாலும், எம்மாதிரியாய் இருந்தாலும் நாங்கள் பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் என்றார் அப்பாஸ்.

இஸ்ரேலுக்கு எதிராக தீவிரவாதம் செயல்பட்டு வரும் ஹமாஸ் இஸ்லாமிக் ஜிஹாட் அமைப்புகள் யுத்தமின்றி ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லையென்று அறிவித்துள்ளன. (பி)

## அமெரிக்காவை அச்சுறுத்தி காரியமாற்ற முடியாது

### வடகொரியாவுக்கு பவல் அறிவுறுத்தல்

(வாஷிங்டன்)

வடகொரியா தனது அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடச் செய்வதற்காக சன்மானம் எதனையும் அமெரிக்கா வழங்கப் போவதில்லை.

வடகொரியா விடயத்தில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் உயர் மட்ட ஆலோசகர் மத்தியில் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகவும் கருதப்படுகின்றது. ஆயுதக்களைவை மேற்கொள்வதற்கு இலவச எண்ணெய், மின்சக்தி, பொருளாதார பரிமாற்றங்கள் மற்றும் இயல்பான உறவுகளை வடகொரிய கோருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

சில தினங்களுக்கு முன் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் காங்கிரஸ் சபையில் பேசிய போது அமெரிக்காவை அச்சுறுத்திக் காரியமாற்ற முடியாது.ஆனால் கடந்த வாரம் சீனாவில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது தெரிவிக்கப்பட்ட முன்மொழிவுகள் பற்றி அமெரிக்கா ஆலோசனை செய்யும் என்று கூறினார்.

வடகொரியா அணு ஆயுதக் களைவு செய்யும் பட்சத்தில் அதற்கான சலுகைகளைச் செய்வதை அமெரிக்கா முற்றாக ஒதுக்கி விடவில்லையென்றாலும் வடகொரியாவின் கூடாத ஒழுக்கத்துக்காக



புஷ் சன்மானங்கள் தரப் போவதில்லை என்றும் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார்.(பி)

## விசாரணைகள் தேவை

(லண்டன்)

பலஸ்தீனத்தில் இஸ்ரேலியத் துருப்புக்களின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி பிரிட்டிஷ் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் உயிரிழந்த சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ள வேண்டுமென பிரிட்டிஷ் வலியுறுத்தியுள்ளது.

பலஸ்தீன அகதிகள் முகாமில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பிரிட்டிஷ் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஜேம்ஸ் மில்லர் கொல்லப்பட்டார்.

இது குறித்து பூரண விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு லண்டனிலுள்ள இஸ்ரேல் தூதரகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. (பி-2)

### ஈராக் பாதுகாப்புப் பணிக்கு

## இந்தியப் படைகளை அழைக்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஈராக்கின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட இந்தியப் படையினரை அங்கு வருமாறு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

ஈராக் பொலிஸாருக்கு உதவும் நோக்கோடும் காயமடைந்த படையினரை அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பவுமே மேலதிகமாக இந்தியப் படையினர் பங்களிப்பினை வழங்க வேண்டும் என்று அமெரிக்கா தனது அழைப்பிலே கூறியுள்ளது.

இந்த விடயம் குறித்து இந்தியாவுக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

எனினும் இதற்கு எந்தவிதமான முடிவையும் இந்தியா அறிவிக்கவில்லை.இந்த விவகாரம் குறித்து அமெரிக்க அதிகாரிகளும், இந்திய தேசிய பாதுகாப்புச்சபையின் ஆலோசகர் முகேஷ்மிஸ்ராவும் அடுத்த வாரம் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

எனினும் இந்த விடயத்தில் இந்தியா அமெரிக்காவுக்கு சாதகமான முடிவை எடுக்குமென தாம் எதிர் பாாக்கவில்லையென அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஈராக் மீதான அமெரிக்காவின் போரையும் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளையும் இந்தியா கண்டித்திருப்பதால் அந்த விவகாரத்தில் இந்தியா அமெரிக்காவுக்கு சாதகமான முடிவை எடுக்கும் என்று நம்பமுடியாதெனவும் அவதானிகள் மேலும் கூறுகின்றனர்.

அத்துடன் இந்திய மத்திய அரசு அமெரிக்காவுக்கு சாதகமான ஒரு முடிவை எடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனுமதிக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (பி-2)

### டயானாவின் மகன்

## பிா.இளவரசர் வில்லியம்ஸ் அமெரிக்காவில் வாழ விருப்பம்

(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் தனது கல்லூரிப் படிப்பை முடித்ததும் அமெரிக்காவில் குறிப்பாக நியூயோர்க்கில் தங்கியிருக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் வில்லியம்ஸுக்கு 21 வயதாகிறது. ஸ்கொட்லாந்தில் பட்டப்படிப்பை முடித்த பின் அமெரிக்காவில் ஏதாவது ஒரு கல்லூரியில் பட்ட மேற்படிப்பைப் தொடருவது அல்லது கலைப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் வேலைக்குச் சேருவது என திட்டமிட்டுள்ளார்.

வில்லியம்ஸின் தாயார் டயானாவுக்கு பிடித்த நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. அவரைப் போலவே மகன் வில்லியம்ஸுக்கும் அமெரிக்கா மீது மோகம் ஏற்பட்டுள்ளது.

கென்ட் இளவரசர் மைக்கேலின் மகள் காபியல்லா தற்போது அமெரிக்காவில் படித்து வருகிறார். இவர் வில்லியம்ஸின் உறவுக்கார பெண். இதுவும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் தனிமையை விரும்பி வில்லியம்ஸ் அமெரிக்கா செல்ல விரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபகாலமாய் வில்லியம்ஸ் கூடப் படிக்கும் கதே மிடில்டன் என்ற பெண் அடிக்கடி அவரை சந்தித்துப் பேசி வருகிறார். இவர்தான் வில்லியம்ஸின் கேர்ள் பிரண்ட் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

வழக்கமாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்தும் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற விருப்பம் தெரிவிப்பர். இளவரசர் ஹாரி ஏற்கனவே இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்துள்ளார். ஆனால் வில்லியம்ஸ் அமெரிக்கா சென்று இருக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

வில்லியம்ஸ் இன்னும் 6 மாதத்தில் 21 வயதை எட்டுகிறார். அப்போது அவருக்கு ராஜமாதா ராணி எலிசபெத் ஏற்படுத்திய டிரஸ்ட் மூலம் ரூ. 15 கோடி கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. (பி)

### தாய்லாந்திலிருந்து புறப்பட்ட

## கப்பல் மாலுமிகள் 10 பேருக்கு சார்ஸ் நோய் அறிகுறி

### உலகில் இதுவரை 430 பேர் பலி

(தாய்லாந்து)

தாய்லாந்தில் இருந்து கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி புறப்பட்ட கப்பல் ஒன்றில் பயணம் செய்த 24 மாலுமிகளில் 10 பேருக்கு ஒரே நேரத்தில் சார்ஸ் நோய் அறிகுறி காணப்பட்டதால் அந்தக் கப்பல் ஹொங் கொங் எல்லையில் அவசரமாக நங்கூரம் இடப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கப்பலுக்குள் விரைந்த ஹொங்கொங் மருத்துவக் குழுவினர் மாலுமிகள் 24 பேரையும் தீவிரபரிசோதனைக்கு உட்படுத்தியதுடன் நோய் தொற்றி உள்ளதாகக் கருதப்படும் 10 பேரையும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மாலுமிகள் தமக்கு காய்ச்சல், இருமல், தடிமன் குணங்கள் இருப்பதாகக் கூறிய போதிலும் அவர்களைப் பரிசோதித்த டாக்டர்களால் எவ்வித நோய் அறிகுறிகளையும் கண்டறிய முடியவில்லை. இதேவேளை, இந்தியாவில் சார்ஸ் நோய்க்கான அறிகுறி எதுவும் இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்த 3 தினங்களில் தமது நாட்டில் சார்ஸ் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக இந்தியா நேற்று அறிவித்துள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னர் ஹொங் கொங்கில் இருந்து நாடு திரும்பிய 25 வயதான நபர் ஒருவர் சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்கத்தா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோயாளி தனிமைப் படுத்தப்பட்ட வாட் ஒன்றில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்படுவதாக மேற்கு வங்காள மாநில சுகாதார செயலாளர் அஸீம்வர்மன் கூறியுள்ளார்.

சார்ஸ் நோயினால் உலகம் முழுவதும் இதுவரை 430 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 6 ஆயிரத்து 500 பேர் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

### பிலிப்பைன்ஸில் அரச படைகள்

## தீவிரவாதிகள் மோதல் 22 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதி நகரம் ஒன்றில் அரச படைகளுக்கும் இஸ்லாமிய தீவிரவாத சந்தேக நபர்களுக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 8 பேர் பொது மக்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. மின்ரனாவோ என்ற தீவில் ஷியாஹரான் என்ற இடத்தில் இந்த மோதல் இடம் பெற்றுள்ளது.

தெற்கு பிலிப்பைன்ஸின் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு விடுதலை கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்ற மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்னும் அமைப்பே இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக அரச படைகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக்காரர்கள் முன்னர் 12 பேரைக் கடத்திச் சென்று பணயக் கைதிகளாக வைத்திருந்தனர் என்றும், இவர்களில் மூன்று பேரைத் தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (பி-2)

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இலங்கையின் இறைமையை மதிக்கின்றனர்

## பேச்சாளர் ரோக்ஹெல்ஸன் பட்டி

(கொழும்பு)

புலிகளை நிதர்சனமான கடல் பிரிவு ஒன்றாக அங்கீகரிப்பது என்ற பிரேரணை மற்றும் கடற்புலிகளை இலங்கைக் கடற்படையுடன் சம அந்தஸ்தில் வைப்பது பற்றி தவறான அர்த்தம் பத்திரிகைகளின் மத்தியில் கற்பிக்கப்பட்டது.

இது தவறு. சட்டப்படியானதாக இல்லாவிட்டாலும் அப்படியான ஒன்று இருக்கிறது என்பதை வலியுறுத்தி இருந்தோம். கடற்பிரிவு என்பது கடல்புலியாகும். கடற்புலிகள் சடடரீதியானதோ, உத்தியோக பூர்வமானதோ அன்றி பிரதேச முழுமையை பாதுகாப்பவர்களோ அல்லர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்புலிகள் தொடர்பான பிரேரணைகள் நாட்டில் ஆத்திர உணர்வுகளை ஏற்படுத்தி இருப்பது குறித்து கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரோக் ஹெல்ஸன் சண்டேலடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் மேலும்,

புலிகள் ஆரம்பத்தில் முல்லைத் தீவுக் கரையில் இருந்து 200 மைல்கள் வரையான இரு கப்பல் செல்லும் இடைவெளிபாதையையே கேட்டனர். இவற்றைக் கண்காணிப்புக்குழு நிராகரித்திருந்தது. கண்காணிப்புக்குழுவினர் யாவரும் இலங்கையின் இறைமையை நன்றாக மதிப்பவர்களே!

இந்தியா கண்காணிப்புக்குழுவினுள் சம்பந்தப்படுவது பற்றி எடுத்துக்கூறுகையில்,

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி கண்காணிப்புக்குழுவின் அங்கத்தவர்கள் டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவடன் போன்ற நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

இதில் மாற்றம் செய்யப்பட வேண்டுமாயின் இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் உடன்பட வேண்டும்.

இந்த நாடுகளே கண்காணிப்புக் குழுவில் இருத்தல் நல்லது என்று ஆரம்பத்தில் கருதப்பட்டதற்கு காரணம், இவை சிறியநாடுகள், பிராந்திய, பொருளாதார, அரசியல் நலன்களை இலங்கைமீது கொண்டிராதவை. இலங்கையில் குடியேற்றங்களை செய்தோ இராணுவ ரீதியில் தலையிட்டோ இராதவை. இவைகளே கண்காணிப்புக் குழுவிற்கான பலமாகும்.

சீன மீன்பிடிப் படகு தரையிலிருந்து 19மைல் தூரத்தில் நின்றது. அதனை 8படகுகள் தாக்கின. ஆனால் முல்லைக்கடலில் 6-10 கடல் மைல்கள் தூரத்தில் 6 கடற்படைக்கப்பல்கள் மறித்து நின்றன. அவ்வேளை ஒரு மணி நேரம் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டு விட்டு கடற்படை அறியாமல் கரைக்குச் செல்லமுடியுமா?

எத்தரப்பும் இதனைச் செய்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இதனை நிரூபிக்க முடியாத நிலை இருப்பதால் இந்த இரு தரப்பிலும் ஏதேனும் ஒன்றே இதனைச் செய்யவில்லை என்று முடிவாகக் கூறமுடியாது என்றே நாம்கூறினோம் என்று தெரிவித்துள்ளார். (உ)

## விசாரணை ஒத்தி வைப்பு

(திருநெல்வேலி)

கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நெல்லியடியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது பத்திரிகையாளர் வே.தமிழ்ச்செல்வன் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வெள்ளியன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

மேற்படி வழக்கு விசாரணையை எதிர்வரும் யூலை மாதம் 18ஆம் திகதிக்கு மூன்று பிரதம நீதிபதிகளை கொண்ட ட்ரயல் அட்பார் ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டது.

இதேவேளை ,அடுத்த வழக்கு விசாரணைக்கு நெல்லியடி பொலிஸ் அதிகாரி,யாழ். பொலிஸ் அதிகாரி ஆகியோரை ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தாக்கப்பட்ட பத்திரிகையாளர் சார்பில் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி ஆஜரானார். (உ-43)

## இலங்கையில் தொழிற்சாலைகள் ஜப்பான் நிபுணர்கள் ஆராய்வு

(கொழும்பு)

ஜப்பான் அரசினதும்-இலங்கை அரசினதும் நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அண்மையில் கொழும்பு வந்துள்ள ஜப்பான் அரசின விசேட பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இலங்கையில் வீடுகள் மற்றும் புதியதொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைப்பது தொடர்பாக தற்போது விரிவாகஆராய்ந்து வருகின்றனர்.

அவ்வாறு புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் பட்சத்தில் பல இலங்கை இளைஞர்-யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கும் எனவும் இதனால் வேலையில்லாட் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வுகாண முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் தற்போது சமாதானச் சூழ்நிலை நிலவி வருவதையடுத்து சீனா, நோர்வே உட்பட பல வெளிநாட்டு நிறுவனங்களும் புதியதொழிற்சாலைகளை இலங்கையில்நிறுவி தமது முதலீடுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துளளமையும் குறிப்பிடத்தக்கவை.(க-10)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

### சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவர் வலியுறுத்து

(காரைநகர்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் யாழ். மாவட்ட சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவர் எஸ்.சிறிதரன நேரிற் சென்று கலந்துரையாடி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கடமை நேரத்தின்போது ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச்சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தியாகராஜா ஜகத்ஜனனி ஆளரவம அற்ற வீதியில் கழுத்துநெரித்து கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கடநத சனிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஊர்காவற்றுறை பிரதேச பொலஸ நிலையப் பொறுப்பதிகாரி எஸ்கொல்லூரே, தீவக அரசியல்துறைப்பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோரை தனித்தனியே நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடி இவ்வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, எமது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெளிக்கள வேலைகளின் போது நமது பிரிவில் ஆளரவம் அற்ற எவ்வீதியாயினும் எந்நேரத்திலும் நேரடியாக தனியாகச் செல்ல வேண்டிய நிலைமையுள்ளது.

இந்நிலையில் மக்கள் மீளக்குடியமராத பகுதிகளால் பிரயாணங்களை மேற்கொள்ளும்போது பாதுகாப்புப் பிரச்சினை பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

எமது சக உத்தியோகத்தர் கொடூரமாக கொல்லப்பட்டு தங்கநகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக எமது சகஉத்தியோகத்தர்கள் கடமைக்குச்செல்வதற்கு பெரும அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமையை போக்குவதற்கு மேற்படி கொலையுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளியை இனங்காண்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் ஏனைய சக உத்தியோகத்தர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். (க-246)

## விடுமுறை காலங்களில் மூடப்பட்டிருக்கும் தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

விடுமுறைகாலங்களில் மூடப்பட்டிருக்கும் அரச மற்றும்தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கு விசேட பொலிஸ்பாதுகாப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம்,மேற்படி வர்த்தக நிறுவனங்களுக்கான பொலிஸ் பாதுகாப்பு, ரோந்துநடவடிக்கை, கண்காணிப்பு பதிவுநடைமுறை விஷ்தரிப்பு, சிவில்உடை, பாதுகாப்பு நடவடிக்கைகள், ஆகியவிதங்களில் செயற்படுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸ் தலைமையக நடவடிக்கைப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கருத்து வெளியிடுகையில்,

கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்துவரும் இக்காலப் பகுதியில் பொலிஸார் தனித்து நின்று எதனையும் சாதிக்க முடியாது.

எனவே,பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு தனியார் நிறுவன பாதுகாப்பு சேவைகளின் ஒத்துழைப்பும் வர்த்தக சங்கங்களின் ஆலோசனைகளும் நாடபபடுகிறது என்றும் தெரிவித்தார்.(க-10)

## இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு மாதாந்தம் 20 கோடி நஷ்டம்

### சபையின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்பட்ட நஷடத்தை தவிர்க்கும் நோக்கிலேயே போக்குவரத்து சபையின் கீழ்இயங்கும் நிறுவனங்களை தனியாருக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இலங்கைப்போக்குவரத்துசபையின் தலைவர் யு.எல்.எம் பாரூப் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகலபாகங்களிலும் இயங்கும் 97 சாலைகளினால் இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு மாதாந்தம் 20 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

எனினும், இலங்கைப்போக்குவரத்துச் சபையின்கீழ் கடமையாற்றும 42ஆயிரம் ஊழியர்களுக்கும் சம்பளம வழங்குவதற்காக அரசாங்கம் திறைசேரியில் இருந்து மானியஅடிப்படையில்ஒருகோடி 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்கிறது.

கம்பஹா, றுகுணு மற்றும் ஊவாப் பிரதேசச் சாலைகளினாலேயே இலங்கைப்போக்குவரத்துச் சபைக்கு பெருமளவு நஷ்டம் ஏற்படுகிறது.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள 4 சாலைகள் சிறப்பான நிர்வாகத்தின் கீழ் இயங்குவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாக சபையின்தலைவர் தெரிவித்துள்ளார். (தி)

## கொல்களத்தில் இருந்து துர்நாற்றம்

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் கொல்களத்தில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அப் பகுதியூடாகப் பயணம்செய்வோர் புகார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கொல்களம் உரிய வதத்தில் துப்புரவு செய்யப்படாமையே இதற்குக்காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தவிரவும்,அண்மையிலுள்ள ரயில் பாதையோரத்திலும் வெட்டப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகள் கொட்டப்படுகின்றதால் இப்பாதையால் செல்வோர் சிரமம் அடைகின்றனர். (உ-51)

## குடியிருப்பாளர் மாநாட்டில் இலங்கைக் குழு பங்கேற்பு

(கொழும்பு)

கென்யாவின தலைநகர் நைறோவில் நேற்று 19வது குடியிருப்பாளர் மாநாடு ஆரம்பமானது.

100 நாடுகளைச்சேர்ந்தஆயிரம் பிரதிநிதிகள கலந்துகொண்ட இம் மாநாட்டில் இலங்கையின் சாாபில் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலானகுழு கலந்து கொண்டது.

வறுமையுற்ற மக்களுக்கு வீடுகளையும் நகர அபிவிருத்தியையும் மேற்கொள்ளுதல் என்பதை தொனிப் பொருளாகக் கொண்ட இந்த மாநாட்டில் தத்தமது நாடுகளில் உள்ள பிரச்சினைகளையும் அனுபவ ரீதியிலான கருத்துக்களையும் அந்நாட்டுப் பிரதிநிதிகள் தெளிவுபடுத்தினர்.

1970ஆம்ஆண்டு முதல் செயற்பட்டு வரும் சமூகஅபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பான விளக்கங்களை இம்மாநாட்டில் முன்வைத்ததன் மூலம் மாநாட்டில் இலங்கை முக்கிய இடம் பெற்றுள்ளது.(தி)

## அதிக அளவிலான விதவைகள் தென்மராட்சியிலேயே உள்ளனர்

### யாழ்.செயலக கணிப்பீட்டில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலேயே அதிக எண் ணிக்கையான விதவைகள் வசிப்பதாக யாழ்.மாவட்ட அரச செயலகம் அண்மையில வெளியிட்ட புள்ளிவிபரத்தொகுப்பில் வெளியிடப்புட்டுள்ளது.

அப்புள்ளிவிபரத்தொகுப்பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நெடுந்தீவுப்பகுதியில் மிகக் குறைந்த அளவிலான விதவைகள் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 21 ஆயிரத்து 235பேர் விதவைகள் உள்ளனர் என்றும் அத்தொகுப்பில மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-77)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர்வகுப்பு மாணவர் மன்ற 'ஒன்று கூடல்' நிகழ்விலே பிரதம விருந்தினர் வரவேற்கப்படுவதையும், அதிபர், உப அதிபர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும் காணலாம். படம்: பரு.நிருபர்



இடைக்காடு மத்திய மகாவித்தியாலய பவள விழாவில் மின்சார சபை பிரதிப்பொதுமுகாமையாளர் முத்துரட்ணானந்தத்திடமிருந்து பேராசிரியர் எஸ்.சின்னத்தம்பி பவள விழா மலரைப்பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். படம்: பரு.நிருபர்

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைப் பகுதியில்

# முகாம் அமைப்பைக் கண்டித்து மக்கள் திரண்டு மறியல் போராட்டம்

## படையினரின் முயற்சி சில மணி நேரம் ஸ்தம்பிதம் அச்சுறுத்தல்களுக்கு மக்கள் அடிபணியவில்லை

(யாழ்ப்பாணம்)

**யாழ். கோட்டையின் மேற்குப் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று காலை 8 மணி முதல் நண்பகல் வரை பொது மக்களால் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.**

ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர் என பேதம் பாராது அணி திரண்ட நூற்றுக்கணக்கானவர்கள் காலை 8 மணியளவில் படையினர் முகாம் அமைத்துவரும் கோட்டையின் மேற்குப் புறத்தினுள் உள் நுழைந்தனர்.

இவ்வாறு நுழைந்த மக்கள் படையினரின் முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக ஆங்காங்கே அமர்ந்திருந்தனர்.

இதனால் படையினர் தமது முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கினர். அத்துடன் பணியில் ஈடுபட்டிருந்த புள்டோசரும் பின்நகர்த்தப்பட்டது.

யாழ். நகர மத்தியில் அமைந்திருக்கும் 512வது படைத்தளத்தை யாழ். கோட்டையை அண்டிய மாநகர சபைக்குச் சொந்தமான காணிக்கு நகர்த்தும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையுடன் தற்போது யாழ். கோட்டையின் மேற்குப் புறமாக அரசுக்குச் சொந்தமான காணியில் படைமுகாம் அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ். நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் படைமுகாம் அமைப்பதற்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்ட போதிலும் அரசோ அன்றி படைத்தரப்போ இதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை.

இந்த நிலையில் யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் இம் முகாம் அமைப்பு முயற்சியைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் பொது மக்களைத் திரட்டி நாடு தழுவிய ரீதியில் மிகப் பெரிய அளவில் வெகுஜனப் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே நேற்றைய மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிறில், பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், யாழ். பல்லைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பரணிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்தும் விதத்தில் குண்டாந்தடிகள், தடுப்புக் கவசம் என்பவற்றுடன் கலகம் அடக்கும் படையினர் மற்றும் பொலிசார் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அத்துடன், பொதுமக்களை வீடியோப் படம் பிடிப்பதிலும் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இது இவ்விதமிருக்க சம்பந்தப்பட்ட இடத்திற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஒலே புருண்டம் மற்றும் முக்கிய படை அதிகாரிகள் விரைந்தனர்.

அவ்வேளையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தமது தரப்பு நியாயங்களை இவர்களுக்கு எடுத்து விளக்கினர்.

மேற்படி மறியல் போராட்டம் காரணமாக காலை 8 மணி முதல் நண்பகல் வரை தீவகத்திற்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

இதனால் பெருமளவு வாகனங்கள் இப்பகுதியில் தரித்து நின்றமையை அவதானிக்க முடிந்தது.

மேலும் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பில் நேற்றைய தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றினை பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில், பொதுச் செயலாளர் ப. கனகலிங்கம் ஆகியோர் யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ்.பத்மநாதனிடம் கையளித்தனர். (உ-4,77,43)

# அரசு-புலிகள் இடையிலான முரண்பாட்டை பேச்சுக்கள் மூலம் தீர்த்து வைக்கலாம்

## ஜப்பானிய விசேட தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன்மாதம் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு அரசாங்கத்துக்கு மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முக்கியமானது என ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னர், நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் யசூசி அகாஷி இதனைத் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அகாஷி,


இந்த நிலைமையில் அரசும் புலிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்வது முக்கியமானது.தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கும் போது இம்மாநாடு தொடர்பாக விரிவாக ஆராயவுள்ளேன்.

இந்த மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜப்பான் பூர்த்தி செய்துள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் தமது சமாதானச் செயற்பாட்டில் வெற்றியை நோக்கி முன்னேறுவர் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது எழுந்திருக்கும் முரண்பாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கக் கூடியவை.

புரிந்துணர்வு உடன்பாட்டிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் தற்போது தோன்றி இருக்கும் இடைவெளிகள் மீது இருதரப்பினரும் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (தி)



## இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அமைச்சின் ஆதரவில் தற்போது கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை சிறப்பித்து அதற்குப் பெருமை சேர்க்கும் விதத்திலும், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் சிறப்பு மலரொன்று வெளியிடப்படவுள்ளது.

உலக இந்து மாநில மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போது இம்மலரின் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

இந்து சமயப் பெரியார்கள் மற்றும் துறை சார்ந்த அறிஞர்கள் பலரது ஆக்கங்களைத் தாங்கி ஏறத்தாழ 100 பக்கங்களுடன் இச் சிறப்பு மலர்வெளிவரவுள்ளது.(உ)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புப் குழுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக கட்டடத்தில் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-246)

## சந்தையில்நாய்கள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

சாவல் கட்டு சந்தைப் பகுதியில் நாய்களின் அட்டகாசம் சமீபகாலமாக அதிகரித்து வருவதால் பொருட்களை கொள்வனவு செய்ய வரும் பொது மக்கள் பெரும் இடைஞ்சல்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.(க-201)


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப்போட்டி

பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 750
2ஆம் பரிசு ரூபா 500
3ஆம் பரிசு ரூபா 250

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அனுசரணை:
*நீர்வேலி பிரம்மஸ்ரீ கு.தியாகராசசர்மா

### போட்டியின் விதிகள்

தரம் ஒன்பதில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரையின் தலைப்பு : ''தாய் அன்பிற்கு நிகரேது''
கட்டுரை 175தொடக்கம் .200 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல்
* வேண்டும்.
கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப்
* போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.
*

### இணைக்கும் பத்திரம்
### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :-----------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்


# தென்னை மடமாவடி மக்கள் தமது இடங்களைப் பார்வை

(திருகோணமலை)

19 வருடங்களின் பின்னர் திருகோணமலை தென்னை மடமாவடிப் பகுதி தமிழ் மக்கள் தமது இடங்களை பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

1984ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஊர்காவல் படையினர் இக் கிராமப் பகுதிகளைத் தீ வைத்துக் கொழுத்தியதோடு 14 பேரை கொலை செய்தும் உள்ளனர்.

இதனையடுத்து இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது அவர்கள் தமது கிராமத்தைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இக்கிராம மக்களோடு திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் உட்பட பலரும் சென்றிருந்தனர். சிரிபாய் மற்றும் புல்மோட்டைப் பகுதிகளுக்கு அருகே இக்கிராமம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-3)

## அபிடேக ஆராதனை

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி நாளை புதன்கிழமை மு.ப 9 மணியளவில் நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தானத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும் மற்றும் கூட்டு வழிபாடு, பஜனை சத்வகம் சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-10)

# வரதராஜப் பெருமாளுக்கு இந்தியாவில் பாதுகாப்பு

(சென்னை)

ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச் செயலாளர் வரதராஜப் பெருமாள் சென்னையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியா சென்ற அவர் முதலில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஆச்வேல் என்ற இடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

2000,2001ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து விட்டு இங்கு வருகை தந்த வரதராஜப் பெருமாள் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்.

மீண்டும் இந்தியாவில் தஞ்சமடைந்த அவரை கடந்த மாதம் இரகசிய இடம் ஒன்றுக்கு இடம் மாற்றி இருப்பதாக இந்திய உளவுப் படையினர் அறிவித்துள்ளனர். எனினும் அவர் எந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார் என்பது அறிவிக்கப்படாத நிலையில் அவரது மனைவியும் மூன்று பிள்ளைகள் மற்றும் அவரது மைத்துனியும் சென்னையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய உளவுத்துறை, இந்திய வெளியுறவுத்துறை மற்றும் மாநில உளவுத்துறை பொலிசார் ஆகியோரின் நேரடிப் பாதுகாப்பில் இவர் தங்க வைக்கப்பட்டுள்ளார். இவருக்கான செலவை தொடர்ந்தும் இந்திய வெளியுறவுத்துறை பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

# வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனங்கள் பொது மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

வீதி ஒழுங்குகளை மீறும் வகையிலும் மிகக் கூடிய வேகத்தில் வாகனத்தை செலுத்தும் சாரதிகள் குறித்து யாழ்ப்பாணம் யாழ். பொது மக்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

மினிபஸ்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகன சாரதிகள் வேகப் போட்டியில் ஈடுபடுவதானது அவ் வாகனங்களில் மற்றும் வீதிகளில் பயணம் செய்யும் பொது மக்களின் உயிருக்கு உலை வைப்பதாக உள்ளதாக பொது மக்கள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிசார் இது விடயத்தில் பொறுப்புணர்வுடன் கடமையாற்றுகிறார்கள் என்றாலும் கூட வீதி விபத்துக்களை தவிர்க்க முடியாதுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.(க-4)

# ஆஸ்த்மா சிகிச்சையில் இன்ஹேலர் பம்பிகளின் பங்கு பெரும் புரட்சியை தோற்றுவித்துள்ளது

ஆஸ்த்மா நோயின் சிகிச்சை இரண்டு கோணங்களில் மேற் கொள்ளப்படமுடியும். ஆஸ்த்மா நோயுடையவர்களின் சுவாசப் பாதை இயற்கையாகவே அருட்டப் படக்கூடியது.இவர்களுக்கு குளிர், கடும் உடற்பயிற்சி, விலங்கு உரோமம், பூக்களின் மகரந்தம்,கால நிலை மாற்றம், உணர்ச்சிவசப்படல் போன்ற ஆஸ்த்மாவைத் தூண்டும் காரணிகள் தனித்தோ,இணைந்தோ சில வகையான இரசாயனப் பதார்த் தங்களை சுவாசப் பாதையில் சுரக் கத் தூண்டுவதால் இச் சுவாசப் பாதையில் ஒடுக்கம் ஏற்பட்டு சுவாசச் செயன்முறையில் தடை ஏற்படு வதே ஆஸ்த்மா நோயாளியின் பிரச் சினையாகும். ஆஸ்த்மா நோயாளி என இனம் காணப்பட்ட ஒருவர் இவ்வாறான ஒடுக்கம் ஏற்படுவதை முன்கூட்டியே மருந்துகளை ஒழுங் காக எடுத்து வருவதன் மூலம் தடுக் கலாம். முன்கூட்டியே தடுக்கும் மருந்துகளை உட்கொள்ளும்படி வைத்தியரால் சிபார்சு செய்யப்பட்ட ஒருவர் ஒழுங்காக அதிலும் முக் கியமாக நோயின் குணங்குறிகள் ஆஸ்த்மா நோய்த்தாக்கம் ஒன்றின் போது நோயாளியைச் சிரமப் படுத்தும் தொய்வு, இழுப்பு,இருமல், மூச்சடைப்பு முதலிய குணங்குறி கள் எதுவும் இல்லாதபோதும் முன் கூட்டியே தடுக்கும் இம்மருந்து களை உட்கொண்டு வரவேண்டும்.

### சுவாசக்குழாய் விரிவடைய

அடுத்தவகை மருந்துகள் ஒரு நோயாளிக்கு ஆஸ்த்மா தாக்கம் ஏற்பட்டு சுவாசம் சிரமமாக இருக் கும்போது அந்தச் சுவாசச் சிரமத்துக் குக் காரணமான சுவாசப்பாதை ஒடுக்கத்திலிருந்து மீட்சிபெற பாவிக் கப்படுபவையாகும். மீட்சிக்குரிய இம்மருந்துகள் பரிவு நரம்புத் தொகுதியைத் தூண்டுவதன் மூலம் சுவாசப்பாதையின் சுவாசக்குழாய் களை விரிவடையச்செய்கின்றன. எனினும் பரிவு நரம்புத்தொகுதியைத் தூண்டும் ஏனைய மருந்துகளைப் போலல்லாது இவை இதய இயக் கதத்தில் பாதகமான விளைவு எதனை யும் ஏற்படுத்துவதில்லை என்பதால் பாதுகாப்பானவையாகும்.பரிவு நரம்புத்தொகுதியைத் தூண்டுவன வும்,இதய இயக்கத்தை அதிகரிப்ப தன் மூலம் பாதிப்பை ஏற்படுத்துவ னவுமான ஐசோப் பிரினலின் ,எ:. பட்றின் போன்ற மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துபவை. எனி னும் எ:.பட்றின் இலங்கையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டும் நித்திரையின்மை,நெஞ்சுப்படபடப்பு போன்ற பக்கவிளைவுகளை ஏற்படுத் துவதாகவும் அறியப்பட்டிருக்கிறது.

### இன்ஹேலர் மருந்துகள்

பொதுவாகப் பாவிக்கப்படும் மீட்சிக் குரிய மருந்துகள் சல்புட்டமோல் (Salbutamol) அல்லது வென் டோலின் (Ventolin) மற்றும் டேபியூட் டலின் ஆகியவையாகும்.இவை மாத்திரைகளாகவோஇன்ஹேலர் பம்ப் (Inhaler) மூலமாகவோ உள்ளெடுக்கப்படலாம்.எனினும் இன்ஹேலர் பம்ப் மூலம் உள்ளெடுக் கும்போது நேரடியாகவே சுவாசப் பாதையை மருந்து சென்றடை வதால் மிக விரைவில் மீட்சியைத் தரும். மாறாக மாத்திரையானது வாய்மூலம் உட்கொள்ளப்பட்டு குடலில் அகத்துறிஞ்சப்பட வேண் டும் என்பதால் தாமதமாகவே

**மருத்துவ விளக்கம்**

மீட்சியைத்தரும். இதைவிட வாய் மூலம் உட்கொள்ளப்படும்போது மாத்திரையானது 2mg சல்புட்ட மோலைக் கொண்டிருக்கும். ஆனால் ஒரு முறை இன்ஹேலர் பம்ப் மூலம் உள்ளிழுக்கப்படும். சல்புட்டமோல் 0.1mg மாத்திரமே ஆகும்.மொத்த விலையைப் பார்க்கும்போது ஓர் இன்ஹேலரின் விலை அதிகமாகத் தோன்றினும் அதிக 200-400 தட வைகள் உள்ளிழுக்கக்கூடிய மருந்து இருப்பதால் உண்மையில் இது மருந தைக் கடையில் வாங்கிப் பாவிப் போருக்கு இலாபகரமானது.

மாத்திரைகளை விடப் பன் மடங்கு நன்மை பயப்பனவான இந்த சல்புட்டமோல் இன்ஹேலர்கள் பற் றிய தப்பபிப்பிராயம் காரணமாக இவற்றின் பாவனை குறித்த அநா வசியமான அச்சம் நோயாளர்களிடம இருந்து வருகிறது. இது ஒரு துர்ப் பாக்கியமான நிலையாகும். உண் மையில் குறைந்த அளவில் நிறைந்த பலனைத் தருவதுடன்,மாத்திரைகள் போல் இரத்தத்தில் கலக்காமல் நேரடியாகச் சுவாசப்பாதையை அடை வதால் பக்கவிளைவுகளும் இந்த இன்ஹேலர் மூலமான சல்புட்டமோல் பாவனையின்போது குறைவு என் பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தொடர்ந்து பாவிக்கும் போது இன்ஹேலரிற்கு நோயாளி அடிமைப்பட்டுவிடுவார் எனகிற தேவை யற்ற பயமும் பலருக்கு இருக்கிறது. இது முற்றிலும் தவறான கருத் தாகும்.தூக்க மருந்துகள், பனடோல் போல் தொடர்ந்து பாவிக்கும்போது அடிமைப்படுத்தக் கூடியவையல்ல இந்த இன்ஹேலர்கள். அவ்வாறு வழமையை விட அதிக தடவைகள் சலபுட்டமோல் இன்ஹேலரைப் பாவிக்க நேரிட்டால் அது நோயாளி நோயின் மீதான கட்டுப்பாட்டினை இழந்து வருவதைக் குறிக்கும்.மேலும் இந் நிலையில் வழமையையும் விட அதிக தடவைகள் சல்புட்டமோல் இன்ஹேல ரைப் பாவித்தும் வழமையாகக் கிடைக்கும் மீட்சி இருக்காது. இவ்வாறான நிலையில் சல்புட்ட மோல் இன்ஹேலருக்கு மேல திகமாக முன்கூட்டியே தடுக்கும் மருந்துகள் கொண்ட இன்ஹேலரை நோயாளிக்கு டாக்டர்கள் சிபார்சு செய்வார்கள்.

### ஸ ரீ ரொ ய் ட் வ கை ம ரு ந் து க ள்

முன்கூட்டியே தடுக்கும் மருந்து களில் முக்கிய இடம் பெறுபவை ஸ்ரீரொய்ட்(Steroid) வகை மருந்து களாகும். இந்தஸ்ரீரொய்ட்மருந்துகள் கொண்ட இன்ஹேலர்கள் சல்புட்ட மோல் இன்ஹேலருக்கு மேலதிக மாகப் பாவிக்கப்பட வேண்டும். அததுடன் மிக முக்கியமாக ஆஸ்த்மா நோயினால் அவதி யுறாத சந்தர்ப் பங்களிலும், தொடர்ந்து ஒழுங்காக காலை,மாலை பயன் படுத்தப்படு வது அவசியம். அத்துடன் இங்கு கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயம் யாதெனில் இந்த ஸ்ரீ ரொய்ட் இன்ஹேலர்கள் ஓர் ஆஸ்த்மா நோய்த்தாக்கம் ஏற்படும்பொழுது மீட்சிக்குப் பயன்படுத்த முடியாது என்பதாகும். சுவாசப்பாதை ஒடுக்கத் தினால் ஏற்பட்ட இவ்வாறான நோய்த்தாக்கத்திலிருந்து மீள் மீட்சிக்குரிய சல்புட்டமோல் இன் ஹேலர் மட்டுமே உதவும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ஸ்ரீரொய்ட் இன்ஹேலர்கள் வருமுன் காப்போனாகத் தொழிற் படுகின்றன.

சல்புட்ட மோல் இன்ஹேலர்கள் போலவே ஸ்ரீரொய்ட் இன்ஹேலர் களும் மருந்தை நேரடியாக சுவாசப பாதைக்குள் விடுவிப்பதால் ஆபத் தான பக்கவிளைவுகள் வெகு அரிதாகவே ஏற்படும் வாய்ப்புண்டு. மாத்திரை வடிவில் கிடைக்கும் ஸ்ரீரொய்ட் வகையினையே சார்ந்த மருந்தான பிரெட்னிசோலோன் மருந்து ஆஸ்த்மா நோயாளிகளி னால் வெகு சர்வ சாதாரணமாகத் துஷ்பிரயோகிக்கப்படுகிறது. இம் மருந்து இன்ஹேலர் மூலம் உள் ளெடுக்கப்படும் ஸ்ரீரொய்ட்கள் போலன்றி குடலிலிருந்து இரத்தத தில் அகத்துறிஞ்சப்பட்டு உடலின ஏனைய பாகங்களுக்கும் செல்வதால், பாரதூரமான பக்கவிளைவுகள் உண்டாகக்கூடும்.கண்மூடித்தனமாக இம் மருந்தைப் பயன்படுததுவதால் உண்டாகும் பக்கவிளைவுகளில் உடல் வீக்கம்,குருதியமுக்கம் அதிகரிப்பு, நோய்த்தொற்றுகள் உண்டாவதற் கான வாய்ப்பு அதிகரித்தல், இரைப்பைப் புண்கள,சலரோகம், எலும்பு பாதிப்பு முதலியவை அடங் கும்.மேலும் பிரெட்னிசோலோன் மருநது தொடர்ந்து பாவித்து வரும் போது அடிமைப்படுத்தும் இயல் புடையது மட்டுமன்றிப்பாதகம்விளை விப்பதாகக் கண்டுகொண்டவுடன் உடனடியாக நிறுத்தும்போது பெரும சிக்கலை ஏற்படுத்தக் கூடியது மாகும். மேற்கூறிய சல்புட்டமோல் இன்ஹேலர்கள் பின்னர் ஸ்ரீரொய்ட் இன்ஹேலருடன் சல்புட்டமோல் இன்ஹேலர் என்ப பல ஆரம்ப வைத்திய முறைகளை முயற்சித்துப் பார்த்தும் போதிய பலன் இராத போது மட்டுமே தகுதிவாய்ந்த வைத்தியர் வாய்மூலம் உட்

எஸ். சுரேந்திரஜித்
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

கொள்ளும் பிரெட்னிசோலோன் மருந்தினைச் சிபார்சு செய்வதற்கு மிக அவதானமாக முடிவு செய்வா. அதுவும் குறுகிய காலத்திற்குப் பாவித்து நோயாளியின் நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின் படிப்படியாக பிரெட்னிசோலோன பாவனையைக் குறைக்கும் எண்ணத துடனேயே அவ்வாறு முடிவு செய் வார்.

### பக்கவிளைவுகள் குறைதல்

நண்டகாலத்துக்கு ஒருவேளை வாய்மூலம் பிரெட்னிசோலோனை உட்கொள்ள நேரிட்டாலும் அந்தப் பிரெட்னிசோலோனுக்கு மேலதிக மாக ஸ்ரீரொய்ட் இன்ஹேலர்களைப் பாவிப்பதன் மூலம் வாய்மூலம் உடகொள்ளும் பிரெட்னிசோலோன மருந்தின் அளவைக் குறைத்து அதன் பக்கவிளைவுகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.

ஆபத்தானவை மற்றும் அடி மைப்படுத்தக் கூடியவை என்ற தப் பபிப்பிராயங்களினாலும்,கூடிய விலை யின் காரணமாகவும் இந்த இன் ஹேலர்கள் பற்றிய போதிய அறி வின்மையாலும் ஆஸ்த்மா நோயா ளரிடையே இன்ஹேலர்கள் செல்வாக் கிழந்திருக்கின்றன .மேலே குறிப் பிட்டது போல விரைந்து செயற் பட்டு, முன்கூட்டியே தடுக்கவும் ,மீட் சியை ஏற்படுத்தவும் உதவுவது டன் மிகக்குறைந்த பக்கவிளைவு களையும் கொண்டிருப்பவை என பதால் இன்ஹேலர்கள் மாத்திரை களிலும் பார்க்கப் பாதுகாப்பானவை, பலன் தருபவை. சுருங்கக்கூறின் இந்த இன்ஹேலர்களின் கண்டு பிடிப்பு ஆஸ்த்மா சிகிச்சையில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்த ஒரு

# அதிகாரப் பரவல் மூலம் இனப் பிரச்சினையை தீர்க்க முடியாது

## ஜே.வி.பி .கருத்து

(கெழும்பு)

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாககல் மூலம் தீர்வுகாண முடியாது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மக்கள் விடு தலை முண்ணனியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் கருத்துத தெரிவிக்கையில்,

மாகாணசபைகளும் இந்த விட யம் சம்பந்தமாக தீர்வுகாணத் தவறி யுள்ளன.

இதன் அடிப்படையிலேயே மாகாண சபைகள் சம்பந்தமாக மக்கள் விடு தலை முன்னணி எதிர்ப்புத் தெரி வித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண் டும் என்ற நிலைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்க வில்லை.

பாஸிஸ அமைப்பான தமிழீழ விடு தலைப்புலிகளுடன் கலந்துரையாடு வதன் மூலம் எந்தவித தீர்வையும் காண முடியாது என்பதே எங்களது நிலைப்பாடாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் தமிழீழ விடு தலைப்புலிகள் ஆளணியையும் ஆயுதங் களையும் அதிகரித்து வருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி எனபது ஓர் இனவாதக் கட்சி அல்ல. தோட்டத் தொழிலாளர்கள், முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் உரிமை களை எமது கட்சி மதித்து நடக்கிறது என தெரிவித்துள்ளார். (தி)

# ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை உற்பத்திகளை ஆரம்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை உடனடியாக உற்பத்திகளை ஆரம்பிக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் பீ.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த தொழிற்சாலையின் பணி யைத் தொடர்வதற்கு 50 கோடி ரூபா தேவைப்படுவதால் இதனை நடத்து வதற்கு போதிய நிதி வசதியுள்ள முதலீட்டாளர் தேவைப்படுகின்றனர்.

ஹிங்குரானைப் பிரதேசத்தில் ஏற்கனவே கரும்புப் பயிர்ச் செய் கையை பலவத்தை சீனித்தொழிற் சாலை ஆரம்பித்திருக்கிறது.

இதனால் 4 ஆயிரத்து 600 குடும்பங்கள் நன்மையடைந்திருப் பதால் இத் தொழிற்சாலை உடனடி யாக இயங்குமானால் பலர் நன்மை யடைவர்கள் என்றார் அமைச்சர்.(க-10)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணை யுடன் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் மாபெரும் தாச்சிச்சுற்றுப்போட்டியின் 4வது சுற்றில் இன்று பி.ப. 4.45 மணிக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும்,மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

# சமய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது இந்து மாநாட்டை ஒட்டி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலயத்தில் இடம் பெற்று வரும் சமய நிகழ்வுகளில் 4வது நாளான இன்று மாலை,

விசேடபூசை, பிரம்மஸ்ரீ ஜெகதீஸ் வரக்குருக்களின் தலைமையுரை, சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங் கம்,கந்தசத்தியதாசன் மதுரகவி அருளானந்தம் ஆகியோரின் சொற் பொழிவுகள் என்பனவும் பால முருகன் குழுவினரின் மங்கள இசை யும் இடம்பெறவுள்ளது. (உ-10)

* * *

(வட்டுக்கோட்டை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆல யததில் இன்று காலை 9மணி முதல் பேச்சுப்போட்டிகள்,விசேட சொற் பொழிவுகள்,வில்லுப்பாட்டு போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேபோன்று உலக இந்து மாநாட்டு வலிகாமம் மேற்குப் பிரிவு நிகழ்வுகள், அராலி ஆகாயகுளம் விநாயகர் ஆலயத்தில் நாளை புதன் கிழமை 5மணிக்கு இடம்பெற வுள்ளது. (உ-216)

# வீடியோ கமரா ஒப்படைப்பு

(நெடுந்தீவு)

பளையில் நடைபெற்ற ஆனை யிறவு வெற்றிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு திரும்பும் வழியில் தவறுதலாகக் கைமாறிய வீடியோ கமரா ஒன்று நெடுந்தீவு பங்குத்தந்தை ஜெபநேசரட்ணத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய வர் ஆதாரம் காட்டி பங்குத் தந்தை யிடம் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (க-48)

# பீற்றசென் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச் சர் ஜோன் பீற்றசென் எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை வரவுள் ளார்.

இலங்கை வரும் இவர் அரசு- புலிகள் சமாதானப்பேச்சுக்களில் தற்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்து அரசாங்கப் பிரதிநிதி களையும்,விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளையும் சந்தித்துப்பேச்சுக்கள் நடத்தவுள்ளார். (த-5)

## படையினருடன் பணியாற்றிய

# 27 தமிழ் புலனாய்வு உறுப்பினர்கள் கடந்த 1 வருடத்தில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப்பிரிவில் பணியாற்றும் தமிழர்களுக்கான பாது காப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப்பணியில் ஈடுபடும் தமிழர்கள் அண்மைக்காலமாக கொலை செய்யப்பட்டுவருவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளதாக படைவட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

முப்படையினருக்கும் முக்கிய மான உளவுத்தகவல்களை வழங்கி யதுடன்,அவர்களுடன் சேர்ந்து பணி யாற்றிய 27 தமிழ்ப்புலனாய்வுப்பிரி வினர் கடந்த ஒரு வருடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் பலர் படையினரின் நீண்ட தூரம் ஊடுரு வும் படை அணியுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்பதுடன் ,விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் ஊடுருவி ,விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் தளபதிகளுக்கு எதிராக தாக்குதலை நடத்தியவர்கள் என்றும குறிப்பிடப்படுகிறது. (உ-3)

# சார்ஸ் நோய் கண்டறிவு கருவி கொள்வனவு

(கொழும்பு)

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட் டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் படி சார்ஸ் வைரசின் தொற்று இருப் பதை வெப்பநிலை மாற்றம் மூலம் கண்டறியும் கருவியை கொள் வனவு செய்வதற்காக அதிகாரிகள் இருவர் நேற்று சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

இக்கருவி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணி களின் சார்ஸ் தொற்று பற்றி அறிய பயன்படுத்தப்படும்.

இக்கருவி பற்றிய விபரங்கள் இக் கருவியை உற்பத்தி செய்பவர் களால் விமான போக்குவரத்துத் துறை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இவ்வுபகரணத்தின் பயன்பாடு பற்றிய விபரங்களை உள்ளூர் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இது பற்றி விமானப் போக்கு வரத்துத்துறைத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு உபகரணத்தின் பெறுமதி ஏறக்குறைய 10 மில்லியன் ஆகும். இதற்காக பெருமளவு பணத்தை வீணாக்க விரும்பவில்லை. மேலும் கருவியை இங்கு கொண்டு வரு வதற்கு கிட்டத்தட்ட 3 வாரங் களாகும். ஒரு டாக்டரும் ஒரு தொழில் நுட்ப அதிகாரியும் சிங்கப்பூர் சென்று ஒரு தொழில் நுட்ப அறிக்கையை சமர்ப்பிப்பார்கள். அதன் பின்னரே கருவி கொள்வனவு செய்யப்படும்.

ஹொங்கொங்கிலுள்ள மருத்துவர் களின் ஆராய்ச்சியின் படி இதனை வட மருத்துவ முகமூடிகளை பயன் படுத்துவது சார்ஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள சிறந்த வழியென்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இவ்வுபகரணம் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் தேவைப்படுவதாகும். இது மார்புப் புற்றுநோயைக் கண்டறிய பயன் படும் என்றார். (உ)

## இன்னு ஒரு தகவல்

# மருந்தில் கவனம்

எனக்குத் தெரிந்த ஒருவர் பொட்டுக்கடலை சாப்பிடுவது போல் மருந்து மாத்திரைகளைச் சாப்பிடுவார். ஏழெட்டு விதமான (மருந்துகளை) மாத்திரைகளை உள்ளங்கையில் எடுத்துக் கொள்வார். அப்படியே வாயில் போட்டுக் கொண்டு தண்ணீரை ஊற்றி விழுங்கிவிடுவார். சரி... இவ்வளவும் டாக்டரைக் கேட்டுக் கொண்டு வாங்கினாரா? என்றால் அதுவும் இல்லை. மருந்து மாத்திரைகளின் பெயர்களெல்லாம் மனப்பாடமாக இவருக்குத் தெரியும். கடைக்குப் போய், கடலை மிட்டாய் வாங்கிக் கொண்டு வருவது மாதிரி இவர் மருந்து வாங்கிக் கொண்டு வருவார்.

இது நல்ல பழக்கம் என்றா நினைக்கிறீர்கள்? விபரத்தோடு சாப்பிடுகின்ற மருந்து வியாதியைப் போக்குகின்றது. விபரமில்லாமல் சாப்பிடும் மருந்து வியாதி உண்டாக்கி விடும். நாம் சாப்பிடுகின்ற மருந்துகளை பற்றி இரண்டு விஷயங்களை முக்கியமாக தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும். இது மிகவும் அவசியம். முதல் விஷயம் பக்கவிளைவுகள் அதாவது மருந்தினால் ஏற்படக்கூடிய வேண்டாத விளைவுகள். பொதுவாகப் பலருக்கு ஒவ்வொரு மருந்தும் ஏதாவது வேண்டாத விளைவைக் கொஞ்சமாவது உண்டாக்கியே தீரும்.

வீரியம் குறைந்த மருந்துகளைக் கூட தவறான முறையிலேயோ, நீண்டகாலத்துக்கோ, அளவுக்கு மீறி அதிகமாகவோ சாப்பிட்டால் வேண்டாத விளைவுகள் உண்டாகிவிடும். அது மட்டுமில்லை. ஒரு மருந்து வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும். இது நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம். இரண்டாவது என்னவென்றால் டாக்டர்கள் சொல்கிற ஆலோசனையைச் சரியாகக் கடைப்பிடிப்பது அவசியம். பெரும்பாலானவர்கள் எப்படியென்றால், டாக்டரிடம் போய் மருந்துச் சிட்டைகளை வாங்கிக் கொள்வார்கள். ஆனால், எந்த மருந்தை எந்த அளவில் எப்பொழுது சாப்பிடவேண்டும் என்று டாக்டர் சொல்வதை சரியாகக் காதில் வாங்கிக் கொள்வதில்லை. அல்லது புரிந்து கொள்வதில்லை. சிலர் இரண்டு மாத்திரைகள் சாப்பிடவேண்டியதற்குப் பதிலாக நாலு மாத்திரைகளைச் சாப்பிட்டால் வியாதிசீக்கிரம் சரியாகிப் போய்விடும், என்று நினைப்பதுண்டு. இன்னும் சிலர் உடம்பு கொஞ்சம் சரியாக ஆனதும் மருந்து சாப்பிடுவதை நிறுத்திவிடுவது உண்டு. இவைகள் மிகவும் ஆபத்தான விடயங்கள். ஆதலால் மிகவும் ஜாக்கிரதையாக கவனமாக இருக்கவேண்டும்.

நாம் சர்வசாதாரணமாக வாங்கிச் சாப்பிடுகின்ற சில மாத்திரைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. ஆஸ்பிரின் சம்பந்தப்பட்ட மாத்திரைகள் இருக்கின்றன. சாலிசிலிக் அமிலத்தினுடைய ஒரு வேதிவிளைபொருள் இது. ஜுரம் வீக்கம், தலைவலி, மூட்டுவலி, உடல்வலி ஆகியவற்றைத் தணிக்கிற குணம் இதற்குண்டு. இரத்தத்தில் கட்டி உண்டாவதை இது தடுக்கிறது. அதனால் இதயத்தாக்குதல் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் குறைகின்றன.

எல்லாம் சரி! இருந்தாலும் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருந்துவர் கண்காணிப்பு இல்லாமல் 'ஆஸ்பிரின்' மருந்துகளைக் கொடுக்கக் கூடாது. பெரியவர்களுக்கு கூட இது வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். வயிற்றுவலி, வாந்தி, சிலசமயம் வயிற்றுப்புண் ஆகியன உண்டாகிவிடும். இவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமென்றால் வெறும் வயிற்றில் அதைச் சாப்பிடவே கூடாது. அதைச் சாப்பிடும்பொழுது ஒரு பெரிய டம்ளர் தண்ணீரும் தாராளமாகக் குடித்துவிடவேண்டும். அளவுக்குமீறி ஆஸ்பிரின் சாப்பிடுகின்றவர்களின் காதில் கிர்... கிர்... என்று ஒரு சத்தம் வரும். மருந்தை நிறுத்திவிட்டால் அது நின்றுவிடும்.

இதனால் ஒவ்வாமை (அலர்ஜி) கூட வரலாம். தோல் தடித்துவிடும். தும்மல், நெஞ்சிலே இறுக்கம் ஆகியவைகள் வரலாம். சாதாரண தலைவலிகளுக்கு ஆறுமணி நேரத்திற்கு ஒருதடவை 600 மில்லிகிராம் அளவுக்கு ஆஸ்பிரின் சாப்பிடலாம். இது மாதிரி தொடர்ந்து பத்து நாட்களுக்குமேல் சாப்பிடக் கூடாது. ஜுரத்துக்கு மூன்று நாள் வரைக்கும் சாப்பிடலாம். ஆஸ்பிரின் சாப்பிடும்பொழுது வேறு மருந்து சாப்பிடவேண்டியிருந்தால் அல்லது அறுவை சிகிச்சை பண்ணிக் கொள்ள வேண்டியிருந்தால், ஆஸ்பிரின் சாப்பிட்டவிஷயத்தை டாக்டரிடம் சொல்லிவிடுங்கள்.

பரசிட்டமோல் என்பதும் நாம் சுலபமாக வாங்கிச் சாப்பிடுகின்ற ஒரு மருந்து. சிறுசிறு வலிகள், வேதனைகளுக்கு நிவாரணம் கொடுக்கும். ஜுரத்தைக் கூடத்தீர்க்கும். ஆனால் ஆஸ்பிரினுக்கு இருக்கிற வீக்கம் தணிக்கும் குணம் இதற்கு இல்லை. இது வயிற்றுப் புண்ணை உண்டாக்காது. ஆறுமணிக்கு ஒரு தடவை 500 மில்லிகிராம் அளவுக்குச் சாப்பிடலாம். பலருக்கு இதைவிடக் குறைந்த அளவே போதும். இதை அதிகமாகச் சாப்பிட்டால் கடுமையான ஈரல் சேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து கூடவரலாம். ஆஸ்பிரின், பரசிட்டமோல் இவை இரண்டும் கலந்து இருக்கிற மருந்துகளை அதிகமாகவும், வெகுகாலத்துக்கும் சாப்பிட்டால் சிறுநீரகநோய்கள் வரும். இரண்டில் ஏதாவது ஒன்றையே ஒரு சமயத்தில் சாப்பிடுவது பாதுகாப்பானது.

அடுத்தபடியாக நுண்ணுயிர்க் கொல்லிகள். இவை கொஞ்சம் காரமாகச் செயற்படுபவை. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் பாதியில் நிறுத்திவிடக்கூடாது. சிலவற்றை வெறுவயிற்றில் தான் சாப்பிட வேண்டும். சிலவற்றைச் சாப்பாட்டிற்கு பிறகு சாப்பிடவேண்டும். இவை சிலருக்கு வயிற்றுப்போக்கை உண்டாக்கிவிடுகின்றன. மருந்து சாப்பிட்டுக்கொண்டே மதுவையும் சாப்பிடக் கூடாது. கருவுற்ற பெண்கள் டாக்டரைக் கேட்காமல் எந்த மருந்தையும் சாப்பிடக் கூடாது. மருந்தை விலைகொடுத்து வாங்கலாம். வியாதியை விலைகொடுத்து வாங்குவதா?

ஒருவர்அப்படித்தான் எல்லாவற்றிற்கும் தானே வைத்தியம் பண்ணிக்கொள்வார். அவருக்கு ஒரே நேரத்தில் ஏகப்பட்ட கோளாறுகள் வந்துவிட்டன. உடனே கடைக்குப் போனார். காய்கறிவாங்குவதுபோல் ஒரு பைநிறைய மருந்து மாத்திரைகளை வாங்கிக்கொண்டு வந்துவிட்டார். என்னசார்! இவ்வளவு மாத்திரைகள் இருக்கின்றனவே. இவைகளை சாப்பிடுவது எப்படி? ஆகாரத்திற்கு முந்தியா?, பிந்தியா? என்று கேட்டார் ஒருவர். "அதைப்பற்றி கவலை இல்லை சார்! ஏனென்றால் எனக்கு ஆகாரமே இவைதான்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

# முகாம் அமைப்பைக் கண்டித்து பிரதமர் ரணிலுக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சில மாதங்களுக்கு முன் வட பகுதியின் மையப்பகுதியாக விளங்கும் மாநகர சபையின் இடத்தில் புதிதாக இராணுவமுகாம் அமைக்கப்படுவது பல மனித நேய அமைப்புக்களால் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அந்த இராணுவமுகாம் அமைப்பது நிறுத்தப்பட்டுள்ளது என்ற தங்களின் அறிவிப்பை தமிழ் மக்கள் மகிழச்சியுடன் ஏற்றுக் கொண்ட வேளையில், தற்போது மீண்டும் யாழ். கோட்டைப்பகுதியில் பதிய இராணுவமுகாம் அமைக்கும் ஏற்பாடுகளை தொடங்கிய விடயம் மிகவும் வேதனைக்குரியதாக தமிழ் மக்களால் கருதப் படுகிறது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

கடந்த பொதுத் தேர்தலின் போது நாட்டுமக்களுக்கு தங்களால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் யுத்தத்தை நிறுத்தி நிரந்தர சமாதானத்திற்கான கோரிக்கையை சகல மக்களும் ஏற்று தங்களுக்கு அரசு அமைக்கும் அங்கீகாரத்தை அளித்தார்கள். அந்த வகையில் தாங்கள் அரசைப் பொறுப்பேற்றவுடன் சமாதானத்திற்கான சிறந்த செயற்திட்டங்களை வகுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் முழு நம்பிக்கை வைத்து வரலாற்றுச் சிறப்புமிக்க சமாதானத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட விடயம் பெருமைக்குரிய விடயமாகும்.

யுத்தம் நிறுத்தப்பட்டு துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்தன. அர்த்தமற்ற உயிர் இழப்புக்கள் நிறுத்தப்பட்டன. ஆனால் யுத்தம் காரணமாக பல ஆண்டுகாலமாக இடம்பெயர்ந்து அகதி என்ற முத்திரை இடப்பட்டு சொந்த மணணில், சொந்த வீட்டில் வாழத் துடிக்கும் மக்கள் ஒருபுறம், மறுபுறம் எதுவித குற்றமும் புரியாத அப்பாவிப் பொதுமக்கள் சிறையில் வாடுகின்றனர்.

சமாதானத்திற்காக பலநாடுகளில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அப்பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட சிறப்பான முடிவுகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்காலிக பேச்சுவார்த்தை இடைநிறுத்த அறிவிப்பு" சமாதானத்தை விரும்பாமல் போரைத் தொடரப போகிறார்கள் என்ற கருத்து அல்ல.

இனிவரும் காலங்களில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்படும் தீர்மானங்களை உடன் நிறைவேற்றுவதற்கு ஓர் உந்துசக்தியாக கருதப்படும்.

தங்கள் அரசின் மேல் முழு நம்பிக்கை வைத்து சிங்கள மக்களுக்குாய அந்தஸ்துடன் தமிழ்மக்களும தங்கள் தாயகப் பிரதேசத்தில் சுய நிர்ணய உரிமைகளுடன் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற கொள்கையில் தங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட மதிப்பிற்குரிய தமிழ்மக்களின் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் சமாதான ஒப்பந்தத்தின் பின்பு ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களையும் பொறுமையுடன் கையாண்டு சமாதானத்திற்காக முன்நின்று செயற்படுவது சர்வதேசமும் அறிந்த விடயம்.

இவ்இராணுவமுகாம் அமையும் இடம் மக்கள் பலபாகங்களிலிருநதும் யாழ்.நகருக்குவரும் பிரதான வழிப்பாதையாக அமைந்துளளது. மேலும் இராணுவ முகாம் அமையவிருக்கும் இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க முனியபபர் ஆலயம், கிறிஸ்தவ தேவாலயம், பொது நூலகம், யாழ். மத்திய கல்லூரி, மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம், பூங்கா என்பன உள்ளன.

எனவே, இவ்விடயத்தை தங்கள் கவனத்தில் எடுத்துக் கெண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என இந்நாட்டின் மக்கள் சார்பாக பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். சமாதானத்திற்காக செயற்படும் தங்களுக்கு தங்கள் அரசுப்பிரதிநிதிகளுக்கும் தங்களுடன் மன வுறுதியுடன் ஒன்றிணைந்து செயற்படும் விடுதலைப்புலிகளுக்கும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கிறோம் என்றுள்ளது. (உ)

---

## இராசி பலன்

**06.05.2003**

**(சித்திரை 23, செவ்வாய்)**

**பஞ்சமி பி.இ 1.16 வரை**

**திருவாதிரை மு.இ. 9.32 வரை**

**இராகுகாலம் - 2.56 - 4.26**

**சுபநேரம் - 10.26 - 11.05**

**மேடம்**
வாக்கு மேன்மை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம், பிரயாண நன்மை

**இடபம்**
காரிய தடங்கல், விதண்டா வாதம், நிலைக் கேடு, தனவிரயம்

**மிதுனம்**
கௌரவமான நிலை, குடும்ப சுகம், புதிய சிந்தை, காரிய அனுகூலம்

**கடகம்**
காரிய அலைச்சல், பிதா சிந்தை, உணர்ச்சிவசப்படல், சுபசெலவு

**சிங்கம்**
புதிய பொருள் சேர்க்கை, எடுத்த கருமங்கள் கைகூடும், தொழில் விருத்தி, கலந்துரையாடல்

**கன்னி**
கடின உழைப்பு, சுபநிகழ்ச்சி, பிறர் உதவி, முயற்சி கைகூடும்

**துலாம்**
கட்டுப்பாடு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல்

**விருச்சிகம்**
எதிர்பாராத அச்சம், வீண் தொல்லை, போசனசுகம், உடல் வியாதி,

**தனுசு**
திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி

**மகரம்**
சத்துருஜெயம், தேக ஆரோக்கியம், காரியநன்மை, செல்வாக்கு

**கும்பம்**
மனக்கவலை, காரிய இடையூறு, கௌரவக் குறைவு, அதிகாரம்

**மீனம்**
மாதாவழி உறவு, கல்வியில் ஆர்வம், வாகனசுகம், முயற்சி தாமதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

---

## 40 மில்லியன் அமெரிக்க டொலர்

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்குக் கடனுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. வடக்கு-கிழக்கு மக்களின் மீளக்குடியமர்த்துகை, நிவாரணம் வழங்குதல் போன்றவற்றிக்கு உதவுவதே இக்கடன் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்மூலம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள், மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களின் சுகாதார, வாழ்விடப்பிரச்சினைகள், குடிநீர் வழங்குதல், கல்வி, விவசாயம் மற்றும் மீன்பிடி, சிறுகைத்தொழில்கள், வீதிகள் அபிவிருத்தி போன்றனவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இத்திட்டம் பெரிய மற்றும் சிறிய உபதிட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இவ் உதவித்திட்டத்திலொன்று மாவட்ட மட்டத்திலான மக்கள் தொகை முழுவதற்கும் பயன்படும் வகையிலான முதலீடுகளுக்கும் மற்றையது சமூக ரீதியில் தனிப்பட்டவர்களதும் உள்ளூர் நிறுவனங்களுக்குமான கடன் திட்டமாகும். இது 490 உபபகுதிகளை உள்ளடக்கயதும் 15 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட உதவு தொகையும் உள்ளடக்கியதுமாகும். (த)

---

## வடக்கு ~ கிழக்கில்

# 15 அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக்க அரசு பணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சிரான் அமைப்பினால் அங்கீகரிக கப்பட்ட 15 அபிவிருத்தித் திட்டங்களையும் துரிதமாக்குமாறு புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணப் பணிகளுக்கான ஆணையாளருக்கு இலங்கை அரசினால் பணிப்புரைவழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர், நிதிய மைசசின் செயலாளர், கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இது தொடர்பான பேச்சுவார்த்தையொன்றை அண்மையில் நடத்தியுள்ளார்கள்.

இத்திட்டங்களை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு கேள்விப் பத்திர நடைமுறைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி நெல்லைக் களஞ்சியப் படுததுவது, அவசர மருத்துவ சேவைகளை பூர்த்தி செய்வது, நீர்ப்பாசன திட்டங்களை மேற்கொள்வது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகள் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்யவும் மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்யவும் நட வடிககை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத் தீவுக்கும் வெல்லாங்குளத்திற்கும் இடையில் பாதை அமைப்பதற்கு 57கோடி 80 லட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இந்தபபணத்தின் ஒரு பகுதி யாழ். கண்டி வீதியைப் புனரமைப்பு செய்யவும் பயன்படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, வடக்குகிழக்கு பகுதிகளில் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களில் மிகவும் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு புதிய வீடுகளை கட்டிக்கொடுக்கவோ, அல்லது சேதமுற்ற வீடுகளை திருத்தவோ உடனடி நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இவ் உதவி குடும்பத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை பொறுத்து 10 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும் என்று இத்திட்டத்திற்கு என 5 கோடி ரூபாவினை பிரதமர் ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இத்திட்டத்தினை வீடமைப்பு அமைச்சு அமுல் செய்யவிருப் பதாக கூறப்படுகிறது.

(க-10)

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை - குறள்

வலம்புரி

## நிதானம் அவசியம்

அரசுக்கும் புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தேக்க நிலை அடைந்துள்ளதை அடுத்து, அதன் முன்னேற்றம் ஸ்தம்பித்து விட்டது. ஆறு சுற்றுப் பேச்சுக்கள் சுமுக மாக நடந்த போதிலும், ஏழாவது சுற்றுப் பேச்சு தடைப்பட்டிருப்பதை மீண்டும் யுத்தத்திற்கான ஆயத்தமாகக் கருதத் தேவையில்லையாயினும், அது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு யப்பானின் தலை நகரில் நடைபெறுவதற்கான சூழ்நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கின்றன. அவர்களின் உதவி எந் நோக்கத்திற்காக வழங்கப் படுகிறது என்பது ஆய்வுக் குரிய விடயமாக இருந் தாலும் முன்னெப்போதும் இல்லாதவாறு இலங்கை யின் அபிவிருத்திப் பணிக் கும், யுத்தத்தால் பாதிக்கப் பட்ட வட-கிழக்கு மாகாணங் களின் புனரமைப்புக்கும் தாராள நிதியுதவியை வழங்க சர்வதேச நாடுகள் பெருவிருப்புக் கொண்டிருப் பது உண்மையே.

இத்தகையதோர் சாதக மான சூழ்நிலையில் சமா தான முயற்சிகள் ஸ்தம்பித் திருப்பது, யப்பான் மாநாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

அதேவேளை, யப்பான் மாநாட்டிற்கு முன்னதாக சமாதானப் பேச்சுக்களை புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதும் நியாயமானதே. அதாவது அரசும் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை முழுமையாக நிறைவேற்ற அரசு தவறி விட்டது. அவ்வாறாயின் யப்பான் மாநாட்டில் வழங்கப் படும் நிதியுதவிகளை, வட்-கிழக்கு மாகாணங்களின் புனரமைப் புக்கு அரசு வழங்குமா என்ற சந்தேகம் ஏற்படவே செய்யும்.

எனவே யப்பான் மாநாட் டுக்கு முன்னதாக அரச தரப்பிலும், புலிகள் தரப் பிலும் உள்ள நிறைகுறை களை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்த பின்னர் நிதியுதவி மாநாட்டைக் கூட்டுவதும், ஏழாம் சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதும் சாலச் சிறப்புடையதாகும். இதன் மூலம் யப்பான் மாநாட்டில் வழங்கப் படும் நிதியுதவிகளும், அங்கு எடுக்கப்படும் தீர்மானங் களும் தகுந்த முறையில் இருதரப்பினாலும் நடை முறைப் படுத்துவதற் கு வாய்ப்பு ஏற்படும். அவ்வகை யில், சமாதானப் பேச்சுக் களில் உள்ள தடைகளை ஆராய்ந்து நிவர்த்தி செய்வது நல்லதே.

ஆனால், சமாதானப் பேச்சுக் களில் ஏற்பட்டுள்ள தடை நிலை நீடிப்பதை எவ்வகையிலும் அனுமதிக் கக் கூடாது.

எனவே, இதுவிடயத்தில் நோர்வே, யப்பான், இலங்கை அரசு,புலிகள் ஆகிய தரப்பினர் மிக நிதானமாகச் செயற்பட வேண்டும்.

அவர்களின் நிதானமான செயற்பாடே இலங்கையில் சண்டையா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கப் போகிறது.

# தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்குவது குறித்து ஆராயலாம்

## உள்துறை அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் ஆயுதங்களை வழங்க முடியாது என உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது, அவர்கள் விடுக்கும் கோரிக்கைக்கு அமைய ஆயுதங்களை வழங்குவது குறித்து ஆராய முடியும் எனவும், சட்டத்தில் இதற்கு இடமிருப்பதாக உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.யுனைட் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்படுவது தொடர்பாக உள்விவகார அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் பல கட்சிகள் தம்மிடம் இருந்த ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்தன. இதனால் அக்கட்சிகளின் பாதுகாப்பினை உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

எதிர்காலத்தில் இக்கட்சிகளின் பாதுகாப்புக் குறித்து உள்துறை அமைச்சு உரிய கவனம் செலுத்தும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தங்களது அமைப்பின் பாதுகாப்பினை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியாத பட்சத்தில் தங்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஆயுதங்களை மீள வழங்குமாறும் அவர் அரசாங்கத்தைக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# அரசுடன் முரண்பாடு கிடையாது

## அமைச்சர் சொக்ஸி மறுப்பு

(கொழும்பு)



நிதியமைச்சர் சொக்ஸிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பதாக வெளியான செய்திகளை அமைச்சர் சொக்ஸி மறுத்துள்ளார்.

தான் பதவி விலகும் கடிதத்தை அரசாங்கத்துக்கு கொடுத்திருப்பதாக வெளியான செய்திகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

நிதி அமைச்சராக சொக்ஸி இருக்கின்ற போதும் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் கலந்து கொள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட சென்றிருந்தார்.

இது தொடர்பில் வெளியான செய்தி எதிர்க்கட்சிகளின் விசமத்தனமான பிரசாரம் என்றும், இது தமக்கு வருத்தத்தைத் தருவதாகவும் சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# சமாதான முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடும்

## சமாதானச் செயலகம் அறிக்கை

(கொழும்பு)

நோர்வே, ஜப்பான் நாட்டுத் தூதுக் குழுக்கள் மற்றும் இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோருடன் இந்திய வெளியுறவு அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருப்பதாக கொழும்பில் இயங்கும் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி மற்றும் இலங்கைப் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகத்தின் தலைவர் பேணாட் குணதிலக ஆகியோர் அண்மையில் இந்தியா சென்று வெளியுறவு அமைச்சர் ஜஸ்வத் சிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டு கடந்த சனிக்கிழமை நாடு திரும்பினார்கள்.

இவர்களது சந்திப்பு தொடர்பாக சமாதான செயலகம் தகவல் வெளியிடுகையில்,

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடவுள்ளது.

இச்சந்திப்பில், ஜப்பானில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகளும் இந்தியாவும் பங்குபற்றுவது குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாத அதேவேளையில் வாஷிங்டனில் நடைபெற்ற முன்னோடி மாநாட்டில் கலந்து கொண்டமையையும் சமாதானச் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (க-10)

## சித்தியடையத் தவறிய

# மாணவனின் தந்தை ஆசிரியர்மீது ஆத்திரம்

(ஏறாவூர்)

கடந்த டிசம்பர் மாதம் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் மிகவும் குறைந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவனின் தந்தையார் தனது மகனிற்கு பாடம் கற்பித்த ஆசிரியரை கடுமையாக தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் ஓட்டமாவடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் பாடங்களை கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர் மீது மேற்படி மாணவனின் தந்தை கடுமையாக தாக்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இவர் தனது மகன் பரீட்சையில் நல்ல பெறுபேற்றை எடுக்காத விரக்தியாலேயே ஆசிரியரைத் தாக்கியிருக்கலாம் என்றும், இவரை உடனடியாகக் கைது செய்து தாம் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (உ-10)

# இந்து மாநாட்டை ஒட்டி இலவச சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது இந்து மாநாட்டை ஒட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் விசேட பூசை மற்றும் இலவச சமய தீட்சை என்பன இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து அடியார்கள் திருமுறைகளை ஓதிய வண்ணம் சுன்னாகம் சிவராஜா, புவனேஸ்வரி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், ஐயனார் கோயில், சந்திரசேகரப் பிள்ளையார் கோயில், பூதவராஜர் கோயில் ஆகிய தலங்களுடாகச் சென்று நண்பகல் 12 மணிக்கு மீண்டும் கதிரமலை சிவன் ஆலயத்தை வந்தடைந்து நண்பகல் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுவதுடன் அன்று பி.ப 4 மணிக்கு விசேட கலை நிகழ்வுகளும், இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# சாரணப் பயிற்சிப் பாசறை

## 156பேர் பங்கேற்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கம் சாரணர்களுக்கான இருநாள் பயிற்சிப் பாசறையை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடாத்தியது.

இதில் 156 சாரணர்கள் பங்குபற்றிப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க மாவட்ட ஆணையாளர் ஏ.ஜெகநாதனின் கண்காணிப்பில் நடைபெற்ற இப்பயிற்சிப் பாசறையில் பிராந்திய சாரணர் பயிற்சி உதவிப் பணிப்பாளர் எஸ்.செல்வநாயகம் பயிற்சிப் பாசறை வழிகாட்டியாகச் செயற்பட்டார்.

சாரணர் இயக்க மாவட்ட உதவி ஆணையாளர்களான எஸ்.ஸ்ரீ நடராஜா, எஸ்.குழந்தைவேல் உட்பட சாரண ஆசிரியர்கள் பல்வேறு குழுக்களாக இயங்கி சாரணர்களுக்கான பயிற்சியினை வழங்கினர்.

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, தும்பனை சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிகளின் சாரண மாணவர்கள் இப்பயிற்சிப் பாசறையிலே பங்குபற்றிப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், வடக்கு-கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அனந்தராஜ், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் இப்பயிற்சிப் பாசறைச் சாரணர்களுடன் கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்கினர். (உ-52)

# புலமைச் சொத்துச் சட்டத்தில் புதிய அம்சம்

(கொழும்பு)

புலமைச் சொத்துச் சட்டத்தில் புதியதொரு அம்சம் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இது ஆயுள்வேத வைத்தியத் துறையைக் காப்பதாக அமையும்.

உள்நாட்டு ஆயுள்வேத உரிமைகளை வெளிநாட்டவர்கள் பெற்றுக் கொள்வதை தடுக்கும் வகையில் இந்தப் புதிய அம்சம் அமைவதாக அமைச்சர் சரத் சந்திரராஜகருணா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமே பயன்படுத்தப்படும் "கந்தலு" என்ற மூலிகையின் சட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்கக் கொம்பனி ஒன்று பெற்றுக் கொண்டதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

ஓம் தினசரி தியானம்

## அடிப்படைச் சாரம்

சுவாசத்தையும், வலிமையையும் உய்த்தறியும் திறனையும் அறிவுத் தெளிவையும், உயிருக்கு வேகத்தையும் தருபவர் உள் நின்றியக்கும் இறைவனே. மறைந்திருந்தே உங்களுக்கு நேசக்கரங்களை நீட்டி உதவுகின்றார். பிறரால் கேட்கப்படாமல் இருக்கும். அவர் உங்களது பேச்சைக் கேட்கிறார். பிறரால் அறிய முடியாத அவர் உங்களது எண்ணங்களை அறிந்திருக்கிறார். அவரை விட்டு வெளியே ஏதும் இல்லை. உங்கள் உடம்பில் இதயம், சுவாசப்பைகள், கல்லீரல், குடல்கள் இருப்பதைப் போல உலகம் முழுவதும் பரம் பொருளில் அடங்கியிருக்கிறது.

சுவாமி சிவானந்தர்

# மோட்டார் சைக்கிள் வயலில் பாய்ந்து இளைஞர் காயம்

(நெல்லியடி)

வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் வயலிற்குள் பாய்ந்ததில் அதில் பயணம் செய்த இளைஞர் படுகாயம் அடைந்த சம்பவம் துன்னாலை முள்ளி என்னும் இடத்தில் கடந்த சனியன்று இடம்பெற்றுள்ளது.

துன்னாலையைச் சேர்ந்த ஆனந்தன் ஜெயராஜா(வயது-26) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

எதிரே வந்த இராணுவ வாகனத்திற்கு வழிவிட முற்பட்ட போது இவ் அனர்த்தம் இடம்பெற்றது. (க-44)

## சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இன்று மாலை 4 மணிக்கு கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பண்ணிசை நிகழ்ச்சிகள் சிறப்புச் சொற்பொழிவுகள், தேவார பாராயணம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)

## புலிகள்-முஸ்லிம்கள் இன்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று இன்று காலை 9 மணிக்கு அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி றமேஸ் தலைமையிலான குழுவினரும், முஸ்லிம் தரப்பில் ஏ.எல்.ஏ.முபீன் தலைமையிலான குழுவினரும் ஈடுபடவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைப்பது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. (இ-5)

## பரீட்சை முடிவுகள் வெளியானது

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

விடைத்தாள் மீள்பரீசீலனைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 9ம் திகதிக்கு முன்பாக உரிய படிவத்தைப் பூர்த்திசெய்து கல்லூரி அதிபரிடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## ஜனாதிபதி வருத்தம் தெரிவிப்பு

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் முதல்நாள் நிகழ்வுகளில் தான் கலந்து கொள்ள முடியாததையிட்டு மிகவும் வருந்துவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தொலைபேசியில் அமைச்சரிடம் தொடர்புகொண்டு பேசிய ஜனாதிபதி இந்து மாநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்த வெளிநாட்டுப் பேராளர்களை தான் கௌரவிக்க விரும்புவதாகவும், இனிவரும் காலங்களில் இந்து மாநாட்டு நிகழ்வுகளில் தான் கலந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறியுள்ளார். (இ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவிலுள்ள தொழில் நுட்பவலர் பயிற்சி நிறுவகததில் எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜுன் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பான ஏனைய விபரங்களை 25-04-2003 இல-1286 வர்த்தமானியில் பார்வையிடலாம்

இதுதொடர்பான விபரங்களையும், விண்ணப்பப்படிவத்தையும் மேற்படி சபையின் இல-7, கோவில்வீதியிலுள்ள வடமாகாண அலுவலகத்தில் பெறலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கோட்டை முகாம் அமைப்பதை உடன் நிறுத்த வேண்டும்

## பிரதமரிடம் மாவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்டையின் மேற்குப்புறமாக புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி தொடர்பாக நேற்றுக் காலை பிரதமர் ரணிலுடன் மாவை சேனாதிராசா எம்.பி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இராணுவ முகாம் அமைக்கப்படுவதால் ஏற்படக்கூடிய பாதகமான சூழ்நிலை பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

இதுபற்றி எமக்கு கருத்துத் தெரிவித்த மாவை நேற்றுக்காலை பொதுசன அமைப்புக்கள், பல்கலைககழக மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் திரண்டு இராணுவ முகாம் அமைக்கப்படும் இடத்திற்குச் சென்று தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இந்த இடத்திற்கு நான் சென்று அவர்களை அமைதிப்படுத்தி பிரதமருடன் இது தொடர்பாக பேசுவதாக நான் கூறினேன்.

இது தொடர்பாக நான் பிரதமருடன் பேசிய போது அந்த முகாமை தொடர்ந்தும் அதில் அமைப்பதாக இருந்தால் பெருமளவில் மக்களின் போராட்டங்கள் மேலும் பரவுவதற்குரிய சூழ்நிலை இருப்பது பற்றியும் எடுத்துக் கூறினேன்.

எனவே இராணுவம் புதிய இடங்களில் இராணுவமுகாம்கள் அமைக்கப்படும் விடயத்தில் நீங்கள் தலையிட்டு இவற்றை நிறுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தேன். இயல்பு வாழ்க்கையையும் அமைதியையும் யாழ் குடாநாட்டில் ஏற்படுத்துவதற்கு உங்கள் தலையீடு அவசியம் எனவும் நான் கேட்டுக் கொண்டேன். அன்ரன் பாலசிங்கம், எரிக் சோல்கெயம், ஹெல்கசன் ஆகியோருடனும் இராணுவமுகாம் அமைப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும்படி கேட்டிருக்கிறேன. அவருடன் பேசியதன் பின் இது தொடர்பாக நான் கவனத்தில் எடுத்துப் பரிசீலிப்பேன் எனக்கூறினார் என்றும் தெரிவித்தார். (உ-4)

---

### திருப்பதி...

பங்கு பற்றிய போதே இவர் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் இந்த இணக்கத்தை தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஆந்திர மாநில அறநிலைத்துறை அமைச்சரிடம் அமைச்சர் மகேஸ்வரன் இலங்கை மக்கள் திருப்பதி ஆலயத்திற்கு உடனடியாக சென்று வழிபாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. அதனால் ஆலயத்தின் கிளை ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு கிளை அமைக்கப் படுமானால் மக்கள் வழிபாட்டுக்கான நேரத்தினை இங்கேயே பதிவு செய்துவிட்டு உரிய நேரத்தில் அங்கு செல்ல முடியுமெனவும் சுட்டிக்காட்டினார். (உ-10)

### ஈ.பி.டி.பியினருக்கான...

பலகல்ல, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகள் ஆரம்பித்ததை அடுத்து தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டன.

இவ்வாறு ஆயுதங்கள கையளிக்கப்பட்ட பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஈ.பி.டி.பியினர் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி உள்ளதுடன் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் மேற்படி உத்தரவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா ஈ.பி.டி.பி அமைப்பினருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்கனவே அதிகரிக்கப் பட்டுள்ளது என்று கூறினார். (த)

---

### நேற்று வன்னி திரும்பிய...

அனைவரும் உற்சாகமாக வரவேற்றனர்.

இதேவேளை வன்னி வந்தடைந்த ஆலோசகர் பாலசிங்கம் உடனடியாகவே விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து தற்போதைய அரசியல் நெருக்குவார நிலைமை குறித்து நீண்ட நேரம் மனந்திறந்து பேசியதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கடிதமும் அதற்கான புலிகளின் பதில் குறித்தும், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசனுடனான சந்திப்பு விபரம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ)

## மாலைதீவு ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி மஃமூத் அப்துல் கையூம் 3 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்றுஇலங்கை வரவுள்ளார். இவருடன் மாலைதீவு முதல் பெண்மணி நகுவீனா இப்ராகிமும் மற்றும் மாலைதீவு உயர் மட்டத்தினரும் வரவுள்ளனர்

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இங்குவரும் இவர்கள் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பிரதமர் ரணில விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான இராஜீக உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதுடன் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மேம்பாடுகள் குறித்தும் ஆராய்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வந்தாலும் அவருக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. இப்போராட்டம் கோட்டை ரயில்நிலையத்திற்கு முன்பாக, மாலை தீவு சிறைகளில் தடுத்து வைக்கபட்ட இலங்கை மீனவர்களை விடுவிக்ககோரி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இந்த ஆர்ப்பாட்டத்தை மாலைதீவு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் நடத்தவுள்ளனர். (உ-10)

## கோப்பாயில் 'இந்து'மத நிகழ்வு

(புத்தூர்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு பொங்கல் சிறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (உ-69)

## சீருடைத்துணி பெறலாம்

(யாழ்ப்பாணம்)

2003ம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை இம்மாதம் 15ம் திகதிக்கு முன் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் பி.எல்.திலகநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

சீருடைத் துணிக்கான கூப்பன்கள் கிடைக்காதோர் தமது பகுதிக் கிராமசேவையாளரிடம் கூப்பன்களைப் பெற்று சீருடைத்துணிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் அறிவித்துள்ளார். (இ-5)

## சரக்கு லொறி கடலில் வீழ்ந்தது

(கொழும்பு)

மூதூர்-திருகோணமலைப் பிரதேசங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் படகுப் பாதையில் ஏறமுயன்ற சரக்கு லொறி ஒன்று கடலில் வீழ்ந்துள்ளது.

இதனால் லொறியில் ஏற்றிச் செல்லப்பட்ட மா, சீனி, சீமெந்து பொருள்களுக்குள் நீர் புகுந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இப்பொருள்களை ஏற்றிக் கொண்டு: திருகோணமலையில் இருந்து மூதூருக்கு சென்ற லொறியே இவ்வாறு கடலில் வீழ்ந்துள்ளது என செரிநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மீள்குடியேற்றம் தொடர்பான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களில் மீள் குடியமர்வுக்கான கொடுப்பனவுப் பட்டியலில் இதுவரை கையொப்பமிடாத புதிய குடும்பப்பதிவு அட்டையை உடையவர்கள், குடும்பப்பதிவு அட்டை, தேசிய அடையாளஅட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன்:

நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்துக்குச் சமுகம் தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாஸன் கேட்டுள்ளார் (து-3)

## நேற்றைய டெஸ்ட் போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிவீரர்கள் காயம்

(கொழும்பு)

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட்போட்டியில் ஒருவரோடொருவர் மோதியதில் இலங்கை வீரர் மாவன் அத்தப்பத்தும் நியூசிலாந்து வீரர் வெக்டோறியும் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டானியல் வெக்டோரி ஓட்டமொன்றைபெற முற்பட்ட போது அவரை ஆட்டமிழக்கச்செய்ய அத்தபத்து விக்கற்றை நோக்கி பந்தை வீசிய வேகத்துடன் தன்னை கட்டுப்படுத்த முடியாதவராக டானியல் வெக்டோறியுடன் மோதுண்டார் இதன் போது இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் போட்டியில் இலங்கை அணி முதலாவது இனிங்சில் இரண்டு விக்கற்றுக்களை இழந்து 94 ஓட்டங்களை பெற்றது. இதில் சனத் ஜெயசூரியா ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி அதன் முதலாவது இனிங்சில சகல விக்கெற்களையும் இழந்து 305 ஓட்டங்களை பெற்றது. (ந-5)


இளம் ஓவியக் கலைஞர்களே!

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

வலம்புரி தினசரியிலும் சங்கு நாதம் வாரமலரிலும்

உங்கள் ஓவியங்கள் இடம்பெற மகத்தான சந்தர்ப்பம். இன்றே வலம்புரி—சங்குநாதத்தின் ஓவியக் கலையகத்தில் உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். வலம்புரியில் தினசரி வெளியாகவிருக்கும் காட்டுனில் உங்கள் கற்பனைத் திறனும் இடம்பெற இன்றே உங்கள் விண்ணப்பங்களை:

"ஓவியக் கலையகம்"
வலம்புரி - சங்குநாதம்
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சமகால பிரச்சினைகளைச் சித்தரிக்கும் உங்கள் காட்டூன்களை உடனடியாக வலம்புரிக்கு அனுப்புங்கள்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.